புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஆகஸ்டு மீ 16 உ [ந. 57.

# ‘வி’

“ஜயம்” ‘ஜயம்

பிரஸங்கம் 57.

## அச்சுநாட்டு பொய் பிரசாரங்களுக்கு இந்தியாவின் மறுமொழி.

“இந்தியாவையும், அதன் தொழிலையும், பிரிடன் ஸ்வயநலத்திற்கு உபயோகப்படுத்துகிறதா.”

### ஜெர்மன் பொய்கள்.

சண்டை தொடுத்து சில காலத்திற்குப்பிறகு, ஜெர்மன் பிரசாரகர்கள், இந்தியா, சண்டையில் பிரிடனுடன் கலந்துகொள்ளவில்லையென்றும் அது செய்யும்

உதவி மிகவும் கொஞ்சம் என்றும் மும்முரமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். லிபியாவிலும், அபிஸீனியாவிலும், இரிட்டிரியாவிலும், இராக்கிலும் இந்தியத் துருப்புகளின் வீரச்செயல்கள், முன்சொன்ன பிரசாரத்தைப் பொய்யாக்கின. ஆகையால் வேறுவிதமான பொய்யைக்கொண்டு ஏமாற்றும்படி வந்தது.

## பிரிடன் ஸ்வய லாபத்தை எதிர்பார்க்கிறது என்ற கட்டுக் கதை: பிரிடிஷ் முதல்.

பிரிடன் ஸ்வயநலம் இந்தியாவில் கருதுகிறது என்று சொல்லுவது சகஜம். இவ்விதமாகச் சொல்லும் வாதங்களைப் பரிசீலனை செய்யும்பொழுது, பிரிடன், இந்தியாவில் ஏராளமான முதல் செலவு செய்து ரயில்வேக்களும், தொழிற்சாலைகளும் அபிவிருத்தி செய்கிறது என்றுதான் தெரியவரும். இந்தத் தொழிற்சாலைகள் மூலம்தான் யுத்தத்தின் பொது உதவிக்குத் தேவையான தளவாடங்கள் தயார் செய்யப்படுகின்றன. விரோத பிரசாரம் செய்கிறவர்கள், ஐக்கிய நாடுகளிலும், தென் அமெரிக்க நாடுகளிலும் பிரிடன் போட்டிருக்கும் லக்ஷக் கணக்கான முதலைத் தன் நலத்திற்கு உபயோகிக்கிறதா என்பதை ஏன் கவனிக்கவில்லையோ. பிரிடிஷ் டொமினியன் நாடுகளிலும் ஏராளமாக பிரிடன் முதல் போட்டிருக்கிறது. ஆயினும் இவைகளைப்பற்றி குறைகூராது இந்தியாவிலும் குடியேற்ற நாடுகளிலும் போட்டிருக்கும் முதலைப்பற்றித்தான் பிரஸ்தாபிக்கிறார்கள்.

## இந்தியத் தொழிலாளர்களை பிரிடன் தன் நலத்திற்கு உபயோகப்படுத்துகிறது என்ற கதை.

இந்தியத் தொழிலாளர்களை பிரிடன் ஸ்வயநலம் கருதியே உபயோகிக்கிறது என்பது மற்றொரு அபவாதம். அதாவது இந்தியாவில் தொழிலாளர் சங்கம் கூட்டவிடாமல் செய்து பணக்காரர்கள் அவர்களைக் கேவலம் அடிமை நிலைமையில் வைத்திருக்கிறார்களாம். ஆனால் ஜெர்மனி தான் தன் நாட்டில் வர்த்தகச் சங்கங்களை கலைத்து, ஜயித்த நாடுகளில் உள்ள தொழிலாளிகளை உண்மையான அடிமைகளாக்கி, உதாரணமாக, ஆயிரக்கணக்கான போலிஷ்காரர்களைத் தாழ்மைப்பட்ட நிலைமைகளில், ஜெர்மன் தொழிற்சாலைகளில் உழைக்கும்படி கட்டாயப் படுத்திற்று. இப்படி இருந்துகொண்டு பிரிடனைப் பறைசாற்றுவது ஆச்சரியம் தான். இந்தியாவில் உள்ள தொழிலுக்கும் பொது ஜனங்களுக்கும் அனுகுணமான சட்டங்கள் மற்ற தேசங்களைக்காட்டிலும் முன்னேறி இருக்கின்றன. முதல் தொழிற்சாலைச்சட்டம் 60-வருஷங்களுக்கு முன்னாடியே அமுலுக்கு வந்துவிட்டது. வர்த்தகச் சங்கங்கள், தகராறு தீர்க்கும்முறை, தொழிலாளிகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது, பிரசவ சாதனங்கள், சமாதானம், பஞ்சாயத்துத் தீர்ப்பது, சரியாக சம்பள பட்டுவாடா, கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் காலம், வசதிகள் சம்பந்தமாக எல்லாம் சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

## மற்ற தேசங்களைவிட இந்தியாவில் தொழிலாளர் சட்டம் அதிகம் முன்னேற்றமடைந்திருக்கிறது.

இந்தியா இன்னும் விவசாயத் தொழிலைத்தான் கைக்கொண்டிருக்கிறது. ஆகையால் 40-கோடி ஜனங்களடங்கிய இந்தியாவில் சிறுபான்மையோர் தான் தொழிற்சாலைகளில் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள். ஆனால், தொழிற்சாலைகள் விருத்தியடைய அடைய தொழிலாளர் க்ஷேமத்தைக் காபந்துசெய்ய சட்ட திட்டங்கள் முன்னடைந்துவிட்டன. உதாரணமாக கடைசியாக 1934-ம் வருஷத்தில் திருத்தங்களுடன் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்சாலைச் சட்டம் விஸ்தாரமான ஏற்பாடுகள் கொண்டது. இதிலிருக்கும் சௌகரியம் மேல்நாடுகளில் கூட ஏற்படவில்லை. வேலை செய்யும் நேரம் குறிக்கப்பட்டிருக்கிறது: அதாவது வாரத்திற்கு 54-மணிகள்தான். சில இடங்களில் இதைவிட குறைவாகவே தானிருக்கிறது. சேர்ந்தாற்போல் இவ்வளவு மணிநேரம் தான் ஒரு கூலியாள் எஜமானனிடம் வேலைசெய்ய வேண்டுமென்பதும் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது. 12-வயதுக்குட்பட்ட ஒரு குழந்தையும் நியமிக்கப்படக்கூடாது. 12-வயது முதல் 15-வயதிற்குள்ளிருப்பவர்கள் தினம் 5-மணிகள் தான் வேலை வாங்கப்படலாம். ஆனால் கவர்ன்மெண்டு வைத்தியரிடமிருந்து சரீரத்தின் சரியான நிலைமைக்கு யோக்யதா பத்திரம் வாங்கி தாக்கல் செய்யவேண்டும். 15-வயது முதல் 17-வயது வரையில் உள்ள வாலிபன் தினம் 5-மணி நேரம் வேலை வாங்கப்படுவான். ஆனால் இவனும் சரீரத்தின் சரியான நிலைமைக்குப் பத்திரம் தாக்கல் செய்யவேண்டும். சரீரத்திற்கு அசௌகரியம் விளைவிக்காதபடி காற்றோட்டமிருக்கும்படியாக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று எஜமானர்கள் நிர்பந்தம் செய்யப்படுகிறார்கள். நல்ல குடி தண்ணீர் வசதிகளும், வேலைக்கார ஸ்திரீகளுடைய குழந்தைகளுக்குத் தங்கும் வசதியும், கொஞ்சம் பிரதம வைத்திய சிகிச்சைக்கு வேண்டிய சாதனமும் தயாராக வைத்திருக்கப்படவேண்டும். வாரத்திற்கு வாரம் ரஜா நாட்களும், தினம் இடைப்பகல் (ஓய்வு) நேரமும் இருக்கவேண்டும். ஆபத்து நேராமல் சரியாக யந்திரங்களைச்சுற்றி பந்தோபஸ்த்து செய்யப்படவேண்டும்.

### ஆச்சரியப்படத்தக்க எண்ணிக்கைகள்.

சென்ற 40-வருஷங்களுக்குள் தொழிற்சாலைகளும் அதில் அமர்ந்துள்ளவர்களின் கணக்கும் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. 1902-ம் வருஷத்தில் 1,533 தொழிற்சாலைகளில், 5,41,634 வேலையாட்களும், 1922-ல் 5,144 தொழிற்சாலைகளில் 13,61,002 பேர்களும் இருந்தனர். கடைசியாகக் கிடைத்த கணக்கின் பிரகாரம் 1938-ம் வருஷத்தில் 9,743 தொழிற்சாலைகளில் 17,37,755 பேர்கள் இருந்தனர். அதில் 2,45,099 பேர்கள் ஸ்திரீகள். இவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மாலை 7-மணி முதல் காலை 6-மணி வரை ஓய்வுதான்.

### வர்த்தகச் சங்கங்கள்.

இந்தியாவில் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து சங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. பல தொழிற்சாலைகளில் கிராமத்தார்கள் வேலை

2

செய்கிறார்கள். கிராமத்திலுள்ளோர் பட்டிணங்களில் பணம் சம்பாதிக்க வருகிறார்களே ஒழிய அங்கே குடும்பத்துடன் வசிப்பதில்லை. ஆனால் கிராமங்களில் தான் வசிப்பது. இப்பேற்பட்டவர்களை சங்கங்களில் சேர்ப்பது சிரமமானதால் சங்கத்தார்கள் இவர்களை அதிகம் வற்புறுத்த முடிவதில்லை. மேலும் பெரும் பாலோர் இச்சங்கங்களை ராஜீய விஷயங்களில் தாங்கள் மேன்மை பெறவே வைத்திருக்கிறார்கள். இவ்வளவு சிரமம் இருந்தும் இவர்களின் அபிப்பிராயங் களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறது. பிரிடனில் இருப்பதுபோலவே, 1926-ம் வருஷத்தில் இந்தியாவில் அமுலுக்குவந்த சங்க சட்டத்தினால் 1928—29-ல் 75 சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. இவைகளில் 2,00,000 அங்கத் தினர்கள் இருந்தனர். 1937–38-ல் 420 சங்கங்கள் 4,00,000 அங்கத்தினர் களுடனும் தற்போது 700 சங்கங்கள் 5-லக்ஷம் அங்கத்தினர்களுடன் பதிவு ஆகி யிருக்கின்றன. இதில் சந்தாக் கொடுக்கும் நபர்கள் ஸ்வல்பம்தான். சங்கங்களும் வரவு செலவு கணக்கு வைத்துக்கொள்ளுவதில்லை.

## சட்ட நிர்மாண சபைகளில் பிரதி நிதித்வம்.

1935-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு சட்டப்படி மாகாண சபைகளில் தொழிலாளர்களுக்குத் தனியே இடம் கொடுத்திருக்கிறது; இவைகளில் சிலர் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களின் தொகுதிகளாலும், தொழிலாளர் நிறைந்த விசேஷப் பகுதிகளாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

## வேலை ஆட்களுக்குத் தற்காப்பு: சமரஸ ஏற்பாடுகள்.

ராஜீய லக்ஷியங்களுக்காக விபரீதக் கக்ஷிகளால் தூண்டப்பட்டு வீணாகத் தொழில் நிறுத்தம் செய்வதில் இந்தியாவில் அதிக நஷ்டம் விளைந்திருக்கிறது. சில வருஷங்களாக பம்பாய் பஞ்சு யந்திர சாலைகளில் வேலை நிறுத்தத்தால் சுமார் 10-கோடி ரூபாய் நஷ்டம் விளைந்தது, என்று பம்பாய் தொழில் இலாகாக் கச்சேரி யில் கணக்கிடப்பட்டது. அதே சமயத்தில் ஆமதாபாத்தில் யந்திர சாலைகளில் வேலைக்காரர்களுக்கு 2-லக்ஷ ரூபாய் தான் நஷ்டம். ஏனென்றால் ஆமதாபாத்தில் மில் சொந்தக்காரர்களடங்கிய பலமான சங்கம் ஒன்றும் வர்த்தகச் சங்கமும் இருக்கின்றன. மேலும் தொழிலாளிகளும், மில் சொந்தக்காரர்களும், அங்கே சிலநாள் வசித்த மகாத்மா காந்தியின் உபதேசத்தால், தாங்களாகவே தங்கள் நன்மைக்காகப் பஞ்சாயத்துச் செய்துகொண்டார்கள். இந்திய கவர்ன்மெண்டார் 1927-ல் இத்தகரார்களைத் தீர்க்கச் சட்டம் ஏற்படுத்தினார்கள். அதன்படி பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்தலாம். ஆனால் அதை ஒருவரும் பிரயோஜனம் செய்துகொள்ளவில்லை. 1934-ல் பம்பாய் கவர்ன்மெண்டு ஒரு சட்டம் கொண்டுவந்தது. அதன்படி லேபர் கமிஷனர்கள் மூலம் ஹிதத்தை நாடவும், கவர்ன்மெண்டு லேபர் உத்தியோகஸ்தர் மூலம் வேலைக்காரர்கள் தகராறுகளைத் தீர்க்கவும்கூடும். 1938-ல் இந்தச் சட்டம் விஸ்தாரப்படுத்தப் பட்டது. வேலைக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனவருத்தங்களைத் தீர விசாரிக்கவும் ஹைகோர்ட்டு நீதிபதியின் மேற்பார்வையில் விசாரிக்கவும் இட மிருக்கிறது. இந்த முறை மற்ற மாகாணங்களில் அனுசரிக்கப்பட்டுவருகிறது.

ஏனென்ருல் தொழிலாளிகள் வேலையை நிறுத்தாமலும் எஜமானர்கள் தொழிற் சாலைகளைப்பூட்டிக்கொண்டு செல்லாமலும், தங்கள் இஷ்டம்போல் செய்யவிடாமல் சமாதான முறைகள் மிக அனுகூலமாக நடந்தேறின.

## சர்வதேசத் தொழிற்கூட்டத்திலும் இந்தியருக்குப் பிரதி நிதித்வம்.

இவ்விதமாக முன்னடைந்ததால், சர்வதேசத் தொழில்கூட்டத்தில் உத்யோக முறையில் இந்தியருக்கு இடம் கொடுக்கப்பட்டது. இதற்குச் சென்ற வர்களில் மிஸ்டர் எம். என். ஜோஷி ஒருவர். ஜெனிவாவில் நடக்கும் கூட்டங் களுக்கு இந்தியாவிலிருந்து ஒவ்வொரு வருஷமும் ஒரு பிரதிநிதி அனுப்பப்படு கிருர்.

## உண்மை புலப்பட்டது.

ஆசையால் இது போன்ற உண்மை நடப்புகள்—இந்தியத் தொழிலாளிகள் வீணுக அடக்கப்படுகிருர்கள், அலக்ஷியம் செய்யப்படுகிருர்கள் என்ற—பொய்க் கதைகளை வெளிப்படுத்துகின்றன. ஆனல் அச்சுநாட்டுப் பிரசாரகர்கள் உண்மை நடப்புகளைத்தெரிந்து அவைகளைப் பரவச்செய்ய சிரமம் எடுத்துக்கொள்ளு வதில்லை.

---

# ஐரோப்பாவிலுள்ள இதர நடுநிலை நாடுகள்.

ஜெர்மனி ஏற்படுத்தப் போவதாய்ச் சொல்லுகிற உலக திட்டங்களை எதிர்த்து ருஷ்யா போர்புரிவதால், மற்றும் ஐரோப்பாவிலுள்ள நடுநிலைமை வகிக்கும் தேசங்களைக் குறித்து ஹிட்லர் மறுபடியும் கவனத்தைச் செலுத்தலாம். நடு நிலைமை வகிப்பதால் ஏற்படக்கூடிய தீங்குகளுக்கு இந்நாடுகள் காரணமாயிருக் கின்றன. சென்ற ஜூலை மாதம் 22-ம்தேதி யுனைடெட் ஸ்டேட்ஸின் காரியதரிசி மிஸ்ட்டர் ஸம்னர் வெல்ஸ், "ஐரோப்பாவிலுள்ள இதர தனி அரசு புரியும் நாடு களின்பேரில் ஜெர்மானியர் புதிய ஆக்கிரமிப்புத் திட்டம் போட்டிருப்பது," என்று தனக்குத் தகவல் வந்திருப்பதாக அறிவித்தார். இந்நாடுகள் சண்டை செய்யாமல் போனலும், பரிதாபகர நிலையிலுள்ளவைகளாக இருக்கின்றன. அவைகளைப்பற்றி நாம் இங்கு சற்று ஆராய்வோம்.

## துருக்கி.

ஒரு மத்தியக்கிழக்கு ஸமஸ்தானம். ஆதலால் அதைக்குறித்து மிஸ்ட்டர் வெல்ஸ் செய்த பிரஸ்தாபத்தில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனல் அது எதிர்க்கப்படாமல் தப்பிக்கமுடியாது என்று நமக்குத் தெரிந்த விஷயமே. ஸம்னர் வெல்ஸ் பேசும்பொழுது, பின்லாந்து, பேருக்குமட்டில் நடுநிலை நாடாக இருந்ததால் அதைப்பற்றியும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. ஸ்வீடன், ஸ்விட்ஜர் லாந்து, ஸ்பெயின், போர்சுகல் இவைகள்தான் பாக்கியுள்ளவை.

## ஸ்வீடன்.

ஸ்வீடனைச்சுற்றி, பின்லாந்து, எஸ்தோனியா, லெத்தீவியா, லிதுவேனியா, டென்மார்க்கு, நார்வே இவைகளெல்லாம் ஜெர்மன் கைவசத்திலோ அல்லது நாஸியின் ஆதிக்கத்திலோ இருக்கின்றன. ஆகவே ஸ்வீடன் நாலாபக்கத்திலும் வளைக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல சிறிய சைனியமும் அதைக்காட்டிலும் நல்ல பெரிய கப்பற்படையும் வைத்திருக்கிறது. ஆனால் ஸ்வீடனின் இரும்பு ஜெர்மனியில் நல்ல விலையாவதால் ஜெர்மனி விரும்பும் பக்ஷத்தில் ஸ்வீடனை ஒரே விழுங்காக விழுங்கிவிடும். சண்டையில்லாமலே ஜெர்மனி ஸ்வீடனிடமிருந்து தனக்குத் தேவையான பொருளை அடையக்கூடுமாகையால் ஜெர்மனிக்கு ஸ்வீடன் பேரில் சண்டைசெய்ய அவசியமில்லை. உதாரணமாக ருஷ்யா பின்லாந்தைத் தாக்கினபொழுது, பின்லாந்துக்கு ஸ்வீடன் உதவியனுப்பாமலும், ஸ்வீடிஷ் பிரதேச மூலமாக இதர நாடுகளை உதவியனுப்பவிடாமலும் ஹிட்லர் தடுத்து விட்டார். இந்த வருஷம் ஜூன், ஜூலை மாதங்களில் பின்லாந்திலிருந்து ருஷ்யாவுடன் சண்டையிட ஏராளமான ஜெர்மன் பட்டாளங்கள் ஸ்வீடன் வழியாகவே சென்றன. இது ரொம்ப சுலபம்தான்! இதற்கு ஸ்வீடன் ஆக்ஷேபிக்கவேயில்லை. ஸ்வீடன் தேசத்தில் ராஜீய அனுதாபங்கள் வெவ்வேறாக இருப்பது உண்மை. நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் சிறுபாலர்; ஸோஷல்-டெமொகிராடிக் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலர். நடுநிலைமையை வகிக்க வேண்டுமென்பது அவர்களுடைய புராதனமான சுதேசாபிமானமுள்ள விருப்பம். அவர்கள் நாஸி இயக்கத்தை வெறுத்து ஜனநாயகத்தைப் பாராட்டினார்கள். அவர்கள் நாட்டின் எல்கைகளின் பக்கத்தில் இரண்டு பெரிய ராஜ்ஜியங்கள் இருப்பதினால் பிறர் தூண்டுதலன்னியில் அவர்களுக்குச் சுயேச்சையாக ஒரு காரியமும் செய்யமுடியாமல் போய்விட்டது. பக்கத்திலிருக்கும் வல்லரசுகள் சொன்னபடிதான் ஆடவேண்டியிருக்கிறது. அது ஜெர்மானியர் சொல்லுகிறபடி இப்பொழுது ஆடுகிறபடியால் ஹிட்லர் இங்கே சண்டையிடத் தேவை இல்லை.

## ஸ்விட்ஸர்லாந்து.

ஸ்விட்ஸர்லாந்தில் தற்சமயம் யுத்த அபாயமில்லை என்று தோன்றுகிறது. ஜெர்மானியர்கள் தெற்கேயுள்ள பிரெஞ்சுப் படைகளைச் சுற்றிவளைத்துக்கொண்டு தாக்கும்படி இதாலியர்களைத் தூண்டிவிட்டு அதே சமயம் தாங்களும் நேராடி பிரான்ஸை நொறுக்கினபொழுதுதான் ஸ்விட்ஸர்லாந்துக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டது. அதற்கு முன்னால் அச்சுநாடுகளான இதாலியரும், ஜெர்மானியரும் இந்த தேசத்தில் பிரவேசிப்பார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. பிரான்ஸ் தோற்றுவிட்டபிறகு ஸ்விட்ஸர்லாந்தைப் பிடிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஸ்விஸ் பத்திரிகைகளில் அந்த நாடு நடுநிலை வகிக்காதென்றும், ஜெர்மனிக்கு விரோதமாக எழுதுவதென்றும் அதற்காக ஜெர்மனி அடிக்கடி பயமுறுத்தி வருகிறது. ஆனால் ஸ்விஸ் கைத்தொழில், விளைபொருள்கள் எல்லாம் ஜெர்மனியைப் போய்ச்சேருகின்றன. நாலா பக்கங்களிலுள்ள பிரதேசங்கள் ஜெர்மன் ஆதிக்கத்தில் இருக்கின்றன. இந்த நிலைமையில் ஹிட்லரின் மிரட்டல்களை அனுபவத்திற்குக் கொண்டுவந்து சண்டையிட அவசியம் ஏது?

மேலும் வெறும் பேராசைகொண்டு ஸ்விட்ஸர்லாந்தைப் படையெடுப்பதாக விரும்பினால், ஜெர்மானியர்களுக்கு விரோதமாக மூன்று விஷயங்கள் இருக்கின்றன. அவைகள் (1) அவர்கள் தேசம் சாதாரணமாக நுழையமுடியாத ஒரு மலை நாடு. பிரஜைகளும் தலைமுறை தத்துவமாய் பலமான தேசாபிமானிகள். (2) பிரிட்டனுக்கு அது சமீபத்திலிருப்பதால் பிரிடிஷ் விமானப்படை அதை சும்மாவிடாது. (3) ஜெர்மனிக்கும், இதாலிக்கும் இடையிலுள்ள போக்குவரத்து சாதனங்களைத்தடுத்தும், ஆல்பையின் மலைப்பாதைகளை உடனே அழித்தும் விடுவார்கள்.

## ஸ்பெயினும், போர்சுகலும்.

முன் சொல்லிய இரண்டு நாடுகளைக்காட்டிலும் இந்த நாடுகள் பெயருக்குக் கூட நடுநிலைமை வகிக்க முடியாமலிருப்பதை நாம் அறியவேண்டும். ஜெர்மானியர்கள், அவைகளை கேவலம் 'காசுக்குத்தோசை' என்று அலக்ஷியமாக நினைக்க வில்லை. (ஹிட்லர் இவ்விரண்டுநாடுகளையும் சேர்ந்தாற்போல் ஆக்கிரமித்துவிடலா மென்று இருக்கலாம்). ஜெர்மானியர்கள் இந்த நாடுகளில் பிரவேசித்துவிட்டால் அவர்களுக்கு வெகு சாதனங்கள் ஏற்படும். ஜிப்ரால்டரைத் தரைவழியாகத் தாக்கலாம்; வட ஆபிரிக்காவுக்கு இங்கிருந்து சுலபமாகச் செல்லலாம்; அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தில் புதிய தளங்கள் ஏற்படுத்திக்கொண்டு பிரிடிஷ் கப்பல்களையும், நேசதேசக் கப்பல்களையும் எளிதில் இரையாக்கலாம்; அமெரிக்காவையும்கூடத் தாக்கலாம்.

உள்நாட்டுக் குழப்பத்தால் சோர்வடைந்திருக்கும் ஸ்பெயின் தேசத்து ஜனங்கள் மிகுதியாக எதிர்க்கமுடியாது. 'புலாஞ்சு' கக்ஷியில் நாஸிகள் பலர் இருக்கின்றனர். மேலும் ஸ்பெயினைப்பிடிக்க ஜெர்மானியத் துருப்புகள் பிரான்ஸ் வழியாக வெகு சுலபமாகச் செல்லலாம். நமக்குத் தெரிந்தவரையில் ஜெர்மானியர்கள் இந்த நாடுகளில் பிரவேசிக்காமலிருக்க ஒரே ஒரு காரணம்தான். ஸ்பானியர்களுக்கு உணவுபொருள்கள் ரொம்பவும் குறைந்திருக்கின்றன. பிரிட்டனும், அமெரிக்காவும் அவர்களுக்கு உதவிசெய்யாமல் போனால் பட்டினியால் வெறுப் படைந்து அவர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்து சிறு சண்டைகளைப்போடலாம். இந்நிலைமை வராமலிருக்க இரண்டு கோடி நாற்பது லக்ஷம் ஜனங்களுக்கு உணவளித்து அன்னிய நாட்டுச் சைனியத்தை அத்தேசங்களில் ஆக்கிரமிக் காமலிருக்கும்படி தடுக்கவேண்டும், அல்லது ஜெர்மானிய சைனியத்தை நிறுத்தி அடக்கி ஆளவேண்டும்.

இவ்விரண்டிலும் ஒன்றுகூட ஹிட்லருக்குச் சாதகமில்லை. ஆனால் ஸ்பெயினது ஒரு கவரக்கூடிய தேசம்தான். அவற்றைக் கைப்பற்ற யாருக்கும் ஆசையாய்த்தானிருக்கும். ஸ்பெயின்தேசத்தினர் புராதன ஜாதியர்கள். அவர்களைப் பட்டினிபோட்டோ, பலவந்தமாகவோ அழிப்பதிலிருந்து ஹிட்லர் நிற்கமாட்டார். ஆனால் இதர இடங்களில் தோல்வி அதிகரிப்பதிலிருந்து அவர் ஸ்பெயின்பேரில் பாயப்பார்க்கலாம்.

# ஜப்பான் கப்பற்படை.

## அதன் சண்டைபோடும் திறமை.

ஜப்பான் கப்பற்படையானது பிரிடன் கப்பற்படைக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பற்படைக்கும் அடுத்தபடி மூன்ருவதாகச் சொல்லப்படுகிறது. 1922-ம் வருஷத்தில் வாஷிங்டனில் நடந்த கப்பற்படைச் சங்கத்தில் மூன்று பெரிய கப்பற்பலம் படைத்த தேசங்களான கிரேட் பிரிடன், யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜப்பான் இவைகளில் கப்பல்களின் மொத்த விகிதம் 5, 5, 3 என்று ஏற்பாடாயிற்று. ஆனல் 1934-ம் வருஷத்தில் ஜப்பான் இந்த உடன்படிக்கையை இரண்டு வருஷத் தவணைகண்டு நோட்டீஸ் கொடுத்து, ரத்து செய்து அதற்கடுத்த வருஷம் லண்டனில் நடந்த கப்பற்படைச் சங்கத்தில் தனக்கு சமமான விகிதம் வேண்டு மென்று வற்புறுத்திக்கேட்டது.

1937-ம் வருஷக் கடாசியில் "வார் இல்லஸ்டிரேடட்" என்ற பத்திரிகை யில் குறிப்பிட்டபடி 46,000 டன் நிறையுள்ள மூன்று சண்டைக் கப்பல்களை ஜப்பான் கட்டிக்கொண்டிருந்தது. இதை விஞ 63 பெரிய யுத்தக் கப்பல்களை கட்டிக்கொண்டோ, கட்ட ஏற்பாடு செய்து கொண்டோ இருந்தது. ஜப்பானிய கப்பற்படைக்கு 7,56,798 டன் நிறையுள்ள 200 கப்பல்கள் இருந்தன. 1941-ம் வருஷத்துக்குள் 11,09,130 டன் நிறையுள்ள 289 கப்பல்கள் விருத்தியாகியிருக் கலாம். 1939-ம் வருஷத்தில் ஜப்பானிய கப்பல் மந்திரி அட்மிரல் 'யோனய்' (Yonai) என்பவர் ஜப்பானிய கப்பற்படை, மற்றுள்ள மிகப் பலமான கப்பற் படை கொண்ட தேசத்திற்குச் சமமாக இருக்கவேண்டுமென்ற ஆறுவருஷ புதிய திட்டத்தைக் கொண்டுவந்தார். கிழக்கு ஆசியாவில் "புதிய ஏற்பாடு" செய்யப் பிரயத்தனப்படும் காலத்தில் இதர தேசங்கள் எதிர்த்தால் அவற்றைத் தாக்கப் போதுமான பலம் வேண்டுமென்பது அவர் கொள்கை. இதைக்கொண்டு 6-வருஷகாலம் கப்பல் கட்டும் திட்டத்தை, 1939-ம் வருஷத்தில் ஜப்பானிய மந்திரி சபை அங்கீகரித்தது.

ஜப்பான் கப்பற்படையைக் குறித்து விவரமாக வெளியே இதரர்களுக்குத் தெரியாது. ஆனல் ஜப்பானுக்குள்ள பண நெருக்கடியில் கைவசமுள்ள கப்பற் படையை முன்னேற்றத்துடன் வைத்துக்கொள்வதைக் காட்டிலும், உபரியாக விருத்தி செய்ய முடியாதென்ற சந்தேகத்திற்கிடமிருக்கும். ஜப்பானிய கப்பல் கட்டும் துறைகளில் 40,000 டன்களுக்கு மேலுள்ளதும் 16" பீரங்கிகள் அடங்கியது மான, 4 அல்லது 5, யுத்தக் கப்பல்களை கட்டிக்கொண்டு இருக்கலாம். அவைகளில் 'மிஷன்' (Mission) என்ற கப்பல் 1939-ம் வருஷம் நவம்பர் மாதத்திலும் 'தாக்காமாத்து' (Takamatu) 1940-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலும் துவக்கின, இரண்டு கப்பல்களும் இவ்வருஷம் கட்டி முடிந்திருக்கலாம்.

இப்பொழுது ஜப்பானுக்கு 10 யுத்தக் கப்பல்களிருக்கின்றன. அவையாவன 1920—1921-ல் கட்டி முடிக்கப்பட்டதும் 32,720 டன்கள் நிறையுள்ளதும்,

எட்டு 16" பீரங்கிகளடங்கியதுமான (1) 'நாகத்து' (Nagato), (2) 'முத்து' (Mutu) என்ற பலமான கப்பல்கள் இரண்டு. மேலும் 29,330 டன் நிறையுள்ளதும் பன்னிரெண்டு 14", ஆறு 6" பீரங்கிகளடங்கிய (3) 'ஹூஸோ' (Huso) (4) 'யாமஸீரா' (Yamasira) என்ற கப்பல்களும், 29,900 டன் நிறையுள்ளதும் பன்னிரெண்டு 14" பீரங்கிகளும், பதினெட்டு 5–5" பீரங்கிகளுமடங்கிய (5) 'ஐஸ்' (Ise) (6) 'ஹூகா' (Hyuga) என்ற கப்பல்களும் ஜப்பானுக்கு இருக்கின்றன. கோங்கோ வகுப்பைச் சேர்ந்ததும் 1913—1916-ல் கட்டி முடிக்கப்பட்டதும், (7) 'கோங்கோ' (Kongo) (8) 'ஹருமா' (Haruma) (9) 'கிரிஸிமா' (Kirisima) என்ற பெயர் வழங்கிய மூன்று கப்பல்களுமுண்டு. அவைகள் 29,330 டன் நிறையுள்ளவை. எட்டு 14" பீரங்கிகளும் பதினாறு 6" பீரங்கிகளும் அவைகளிலிருக்கின்றன. 1930-ம் வருஷத்தில் இந்த வகுப்பில் சேர்ந்த (10) 'ஹீஜ்' (Hiej) என்ற கப்பற்படையை எடுத்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது அந்தக் கப்பலுக்கு மறுபடியும் பீரங்கிகளை ஏற்றியிருக்கலாம்.

ஜப்பான் கப்பற்படையில் 8" பீரங்கிகளுடன் பலமான கவசம் பூண்ட 12 யுத்தக் கப்பல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகக் கட்டப்பட்ட கப்பலின் பெயரே அந்தந்த வகுப்பில் கட்டப்பட்ட கப்பல்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. "அடாகோ, தாகோ, தோகை, மாயா" இவை ஒவ்வொன்றும் 9,850 டன் நிறையுள்ளதும், பத்து 8" பீரங்கிகளுமடங்கியவை. அவைகள் 1932-ம் வருஷத்தில் கட்டப்பட்டன. 'நாடி,' 'மியோகோ,' 'அஸிகாரா,' 'ஹாகூரோ' என்ற கப்பல்கள் 10,000 டன் நிறையுள்ளவையும் பத்து 8" பீரங்கிகளுமடங்கியவை. இவை 1929-ம் வருஷத்தில் கட்டப்பட்டவை. 'காகோ,' 'ஹருதகா,' 'கினுகாசா,' 'ஐஓபா' என்ற பெயரிட்ட கப்பல்கள் 7,100 டன் நிறையுள்ளதும், ஆறு 8" பீரங்கிகளும் அடங்கியவை. அவை 1926–1927-ல் கட்டப்பட்டவை. இதை வினு அதனிடம் ஐந்து பழய் க்ரூயிஸர்களும் உண்டு. அவைகள் (9,010 டன் நிறையுள்ள) 'யுகோமா,' (9,180 டன் நிறையுள்ள) 'இடுமோ' 'ஐவாடி' (8,640 டன் நிறையுள்ள) 'அதூமா,' (7,080 டன் நிறையுள்ள) 'காஸூகா' என்ற கப்பல்கள்தான். இவைகள் ஐந்தும் ஜப்பான் கடற்கரை ஓரத்தைப் பாதுகாக்க உபயோகப்பட்டு வருகின்றன.

இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த க்ரூயிஸர்களில் புதிய யுத்தக்கப்பல்கள், 8,500 டன் நிறையுள்ளவை. அவைகள் ஒவ்வொன்றிலும் பதினைந்து 6–1" பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள்தான் 'மோக்மை' வகுப்பைச் சேர்ந்தவைகள். 'மோக்மை,' 'மிலூமா,' 'சூஸூயா,' 'குமானே' என்ற கப்பல்கள் 1935-ம் வருஷம்முதல் 1937-ம் வருஷத்துக்குள் கட்டப்பட்டவை. 'டோனும்,' 'திக்குமாவும்தான் இந்த வகுப்பில் புதிதாய்க் கட்டப்பட்ட கப்பல்கள். அவைகளில் பதினைந்து பீரங்கிகளுக்குப் பதிலாக பன்னிரெண்டு 6—1" பீரங்கிகளாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஸிந்து (Zinto) வகுப்பைச் சேர்ந்த, ('ஸிந்து,' 'நாகா,' 'ஸோர்ந்தை') என்ற மூன்று கப்பல்களும், 'நாடோரி'

(Natori) வகுப்பைச் சேர்ந்த ('நாடோரி,' 'இசுஸு,' 'கினு,' 'நகரா,' 'யூரா,' 'அபுகுமா') என்று பெயரிட்ட ஆறு கப்பல்களும், கூமா, (Kuma) வகுப்பைச் சேர்ந்த ('கூமா, தாமா, ஓய், கிதாகாமி, கிஸோ,' என்று வழங்கும் ஐந்து கப்பல்களும், 'தென்ருயூ' (Tenruyu) வகுப்பிலடங்கிய ('தென்ருயூ, டாடோ') என்று சொல்லப்பட்ட இரண்டு கப்பல்களும், 'யுகாரி' என்ற கப்பலும் ஜப்பானிய கப்பற்படையில் அடங்கியவை. 'ஸேந்தை' வகுப்பைச் சேர்ந்த கப்பல்கள் 5,195 டன்கள் நிறையுள்ளவை. 'யுகாரி' வகுப்பைச் சேர்ந்த கப்பல்கள் 2,890 டன்கள் நிறையுள்ளவை. மற்ற கப்பல்களின் நிறை பலவாராக இவ்வெண்ணிக்கைகளுக்குள் உட்பட்டிருக்கின்றன. இந்தக் கப்பல்களில் 5-5" பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

## ஆகாய விமானம் தூக்கிச்செல்லும் ஏழு யுத்தக் கப்பல்கள்.

ஆகாய விமானங்களைத் தூக்கிச் செல்லும் ஏழு யுத்தக் கப்பல்கள் ஜப்பானுக்கு உண்டு. இவைகளில் புதியவை, ஸோரியூ வகுப்பைச் சேர்ந்த (1) ஸோரியூ, (2) ஹெரியூ, (3) ஸியோகாகு என்ற மூன்று கப்பல்கள். அவை 10,050 டன் நிறையுள்ளவை. மற்றவை 7,100 டன் நிறையுள்ள (4) ரியூஸுயோவும், (5) 7,470 டன் நிறையுள்ள ஹோஸியோவும், இரண்டும் சேர்ந்து 26,900 டன் நிறையுள்ள (6) 'காகா' (7) 'அகாகி' என்று இரண்டு பெரிய கப்பல்களுமிருக்கின்றன. மேலும் இரண்டு ஆகாய விமானம் தூக்கிச் செல்லும் கப்பல்கள் கட்டப்பட்டும் வருகின்றன.

சிறிய கப்பல்களில் ஜப்பானியர்களுக்கு 130 நாசகாரிகளும் உண்டு. (12 கையுரோ வகுப்பைச்சேர்ந்தவை. அவைகளில் பத்து கட்டப்பட்டு முடிவடையும் நிலைமையில் இருக்கின்றன. 10 'அஸோஸியா,' 10 'ஸிகூரி' 6 'ஹாதுஹாரு,' 23 'ஹுபூகி,' 12 'முதுகி,' 9 'காமி காஸி,' 15 'ஹுசி காஸி,' 7 'வாகாதாக்கி,' 19 'காயா,' 3 'மோமோ' வகுப்பைச் சேர்ந்தவைகள் மேலும் 12 டார்பிடோப் படகுகளுமிருக்கின்றன. இன்னும் பல கட்டப்பட்டு வருகின்றன. ஜப்பானின் நீர்மூழ்கிக் கப்பல்கள் நான்கு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை (1) சமுத்திரத்தில் செல்லக்கூடியவை, (2) கடலில் செல்லக்கூடியவை (3) கடற்கரை யோரத்தில் செல்லக்கூடியவை, (4) கடற்கண்ணிகளைப் பரவக்கூடியவையும். அவை 1,400 டன் நிறையிலிருந்து 1,000 டன் நிறை வரை கன முள்ளவை. இப்பொழுது இம்மாதிரியான நீர்மூழ்கிகள் 72 இருக்கின்றன. இன்னும் பலவை கட்டப்பட்டுவருகின்றன.

யுனைடெட் ஸ்டேட்ஸின் கப்பற்படைகளில் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள பாகமும் ஜப்பானிய பூரா கப்பற்படையும் சமமாகும். அமெரிக்காவில் கப்பல் கட்டும் திட்டம் ஜப்பானைக் காட்டிலும் பெரிதானது. ஜப்பான் கப்பற்படைப் பத்திரிகைகளில் பிரஸ்தாபித்து வருகிறபடி பலமாகச் சண்டையிடத் திறமை வாய்ந்ததா என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. 'ஸ்வதந்திர ஐரோப்பா'

பத்திரிகையில் வாஷிங்டனிலுள்ள நிருபர் ஹெஸ்ஸல் டில்ட்மான் என்பவர் சென்ற சில வாரங்களுக்குமுன் எழுதியதாவது :—

"ஜப்பானியர் கப்பற்படையை கப்பல் கப்பலாக சீர்தூக்கிப் பார்த்து குறி வைப்பதிலும், பாதுகாப்பிலும் அவைகளை ஓட்டுவதிலும், அமெரிக்க கப்பற்படை என்ன பிரிடிஷ் கப்பற்படை என்ன இவைகளைக் காட்டிலும் 100-க்கு 20 பங்கு விகிதம் சாமார்த்திய குறைவாகவே இருக்கிறதென்று பொது நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஒரு அமெரிக்க நாசகாரியைக் கொண்டு, ஜப்பானிய க்ரூயிஸரைத் தாக்கலாம் என்றும், ஒரு அமெரிக்க க்ரூயிஸரைக்கொண்டு ஒரு ஜப்பானிய யுத்தக் கப்பலைத் தாக்கவும்கூடும் என்றும் அமெரிக்கா கப்பல் உத்தியோகஸ்தர்கள் சொன்னார்கள். கீழ்த்திசையிலும் இரண்டு பெரிய பிரிடிஷ் அமெரிக்கக் கப்பற்படை மாலுமிகளுக்கு ஜப்பானிய கப்பற்படை மாலுமிகள் சமமாகமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் பரவி இருக்கிறது. இருந்தபோதிலும் ஜப்பானியர்கள் மிகவும் தைரியசாலிகள். அவர்களுடைய எதிர்ப்பை நாம் அவமதிக்கக்கூடாது."

---

# வார யுத்தச் செய்திகள்.

## 7—8—41-லிருந்து 13—8—41-வரை.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

**மூன்றும் தடவையாக மின்னல்படை.**—ருஷ்யாவுடன் யுத்தம் ஆரம்பித்து 8 வாரங்கள் ஆகியும் ஒரு விதமான வெற்றியும் அடையாததால் ஜெர்மனி மின்னல்படையை மூன்றும் தடவையாக உபயோகித்திருக்கிறது. லெனின் கிராட்டுக்கு அருகிலுள்ள சால்ட்ஸி என்னும் இடத்திலிருந்தும் யூக்ரேனுக்குத் தெற்கிலும் ருஷ்யர்கள் சற்றுப் பின் நகர்ந்திருக்கிறார்கள். ஆனால் லெனின் கிராட், மாஸ்கோ, கீவ் முதலியனவெல்லாம் எப்போதும்போல் ருஷ்யர் வசம் தானிருக்கின்றன. மாஸ்கோவுக்கு நேராகப்போகும் வழியில் இருக்கும் ஸ்மாலென்ஸ்க் காலிசெய்யப்பட்டது. கீவில் சீராக சைனியம் செல்ல முடியாததால் ஜெர்மனி ஒடெஸ்ஸா, ஸெபாஸ்டபூல் என்ற இடங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அப்படியே காகஸஸ் மலைச்சாரலில் உள்ள உலோகங்களைக் கைப்பற்ற உத்தேசம்போல் இருக்கிறது. ஜெர்மனி பிடித்த ஸால்ட்ஸி, லெனின் கிராட்டிலிருந்து 123-மைல் தூரத்திற்கப்பால் இருக்கிறது. ஆனால் இவ்விடத்தை சூழ்ந்து கொள்ளுவதில் மின்னல்படையின் கதிபோல் தந்திரம் பலிக்கவில்லை. ஆர்க்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரையிலும் ருஷ்ய சைனியம் ஒரே வரிசையாக இருந்து ஒன்றுபட்டு சண்டை செய்து வருகிறது. சில இடங்களில் கொஞ்சம் பின்வாங்க நேரிட்டாலும் இவ்வரிசை கலக்கப்படவில்லை.

**ஜெர்மன் சைனியத்தின் பின்புறம்.**—ருஷ்ய கொரில்லாப்படை திடீரென்று பாய்கிறது. இதனால் அடிக்கடி ஜெர்மானியருக்குப் பயம் ஏற்பட்டுவருகிறது.

மேலும் ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளை ருஷ்யர்கள் தாங்களாகவே எரித்து எதிரிக்கு ஒன்றும் மிஞ்சாமல் செய்துவிடுகிறார்கள். ருஷ்யாவில் பல் நதிகளும், ஏரிகளும், சதுப்பு நிலங்களும் அதிகம் இருப்பதால் ருஷ்யப் பொது மக்கள் முன் சொன்ன விதமாகவெல்லாம் செய்வது ருஷ்யச் சைனியத்திற்கு பெரும் ராணுவ உதவி முறைதான். "பழிக்குப்பழி வாங்குவது, ஈவு இறக்கம் கூடாது சுட்டுப் பொசுக்குங்கள்" என்ற முறைகளைக் கையாண்டு ருஷ்யர்கள் சரியானபடி நேருக்கு நேர் பழிக்குப்பழி வாங்கி சண்டை செய்கிறார்கள். யூக்ரேனில் இவ்வருஷம் வழக்கத்தைவிட 4-பங்கு அதிகமாக விளைவு ஆனதையெல்லாம் ஏற்கனவேயே சாகுபடி செய்து யூரல் மலைச்சாரலுக்குக் கொண்டுசேர்த்து விட்டார்கள்.

## பெர்லினை ருஷ்யர்களும் தாக்குகிறார்கள்.

கிழக்கிலும், மேற்கிலும் ஜெர்மனி இப்பொழுது ருஷ்யப்படைகளாலும் பிரிடிஷ் படைகளால் விமானத்திலிருந்து தாக்கப்படுகிறது. சென்ற வியாழக்கிழமை துவக்கிய எதிர்ப்பை ருஷ்யா விடாமல் ஜெர்மனியைத் தாக்கிவருகிறது. ஆனால் ஜெர்மானியர் இவைகளை முதலில் மறுத்தனர். இப்பொழுது பிரசாரத்திற்குத்தான் ஏற்பட்டதென்றும் ஜெர்மனியில் சேதம் ஒன்றும் ஏற்படவில்லையென்றும் சொல்லுகின்றனர். மேலும் பிரிடிஷ் விமானங்கள் வருவதையே எதிர் பார்த்ததினால் ருஷ்ய விமானங்கள் கவனிக்கப்படாமல் இருந்தனவென்றும் சாக்குச் சொல்லப்படுகிறது.

**ஏராள நஷ்டம்.**—ருஷ்யர்கள் 10-லக்ஷம்பேர் இறந்தனர் என்று ஜெர்மனி சொன்னாலும் ஜெர்மானியருக்கு 15,00,000 பேர்களும், 5,000 டாங்கிகளும், 8,000 துப்பாக்கிகளும், 6,000 விமானங்களும் நஷ்டம். இந்த நஷ்டங்களுக்கு பொய்க் காரணம் கூறுகையில், ஏதோ ஸ்டாலின் அரண் ஒன்று இருக்கிறதாகவும் அதனால்தான் ஜெர்மன் சைனியம் தடைபட்டு நாசமாக்கப்படுகிறதாகவும் ஜெர்மானியர் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படியொன்றுமில்லை. ருஷ்யர்கள்தான் வீரத்தனமாக யுத்தம் செய்கிறார்கள். அவ்விடங்களில் கோட்டைகள் கிடையாது. வீரம் தான் பகைவரைத் தடுக்கிறது. கடலில் ஜெர்மனிக்கு ஜூனிலிருந்து ஆகஸ்டு வரையிலும் 14 நீர்மூழ்கிகள் சேதம்.

## ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் கலகம்.

யூகோஸ்லாவியாவில் ஜெர்மனிக்கு எதிராக கலகங்கள் ஏற்பட்டுவிட்டன. ஜெர்மன் சைனியத்தையும், போக்குவரவு சாதனங்களையும், பாலங்கள், டன்னல்கள், ஆகாரம், வெடிமருந்துகளையும் மறைந்திருந்து எதிர்க்கிறார்கள். இதைத்தடுக்க ஜெர்மன் ராணுவ பயங்கர அரசாட்சி ஏற்பட்டிருக்கிறது. கும்பல் கும்பலாக பொது ஜனங்கள் கொலைசெய்யப்படுகின்றனர். அல்பேனியாவில் இதாலியச் சைனியம், கலகக்காரர்களால் தாக்குண்டது. ஸெகோஸ்லோவாகியாவில் பஞ்சம் உண்டாயிருக்கிறது. அங்கே கம்யூனிஸம் பரவச் செய்கிறதற்காக 800 பேர்கள் கைதி செய்யப்பட்டனர். பால்கன் நாடுகளின் நிலைமை அபாயமாக

இருப்பதால் யுத்த தளகர்த்தர், லீஸ்டு, ருஷ்யப்போர் முனையில் சைனியத் தலைமை வகிப்பதை விட்டு விட்டு ஆதென்ஸுக்கு நழுவி விட்டதாகத் தெரியவருகிறது.

## ஸ்லாவ் தேசத்தினர்களின் சேர்க்கை.

போலாந்து, ஸெக்கோஸ்லோவாக்கியா, ஸெர்பியா, க்ரோட், ஸ்லாவ், மாஸிடோனியா, மாண்டிநீகரோ என்ற தேசத்தினர்களின் பிரதிநிதிகள், அவர்களுக்குப் பொதுவாயிருக்கும் எதிரியைத் தாக்குவதற்காக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியதென்று, ஆகஸ்டு மாதம் 10-ம் தேதி மாஸ்கோவில் கூடி ஆலோசனை செய்தார்கள். எதிரியுடன் போரிட ருஷ்யாவில் ஸெக் ராணுவப்படை ஒன்று தயராகிக்கொண்டிருக்கிறது.

## தூரக் கிழக்குப் பிரதேசம்.

அமெரிக்காவும் பிரிடனும் உடனே பொருளாதார நடவடிக்கை எடுத்துக் கொண்டதிலிருந்து, இவ்வளவு தூரம் ஜப்பானின் கொள்கையில் ஒழுங்கு ஏற்படுமென்று சொல்வதற்கில்லை. இச்சமயம் அவ்விடத்தில் ஏதோ அமைதி போல் உலாவுகிறது. ஆனால் ஜப்பான் வடக்கிலும், தெற்கிலும் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்து வருகிறது. ஜப்பான் இருவகையில் தெற்கு நோக்கிப் போவதெல்லாம் சமாதான முறையில்தான் என்று அட்மிரல் டொயோடா (Toyoda) சொல்வது வெறும் ஆர்பாட்டமோ, அல்லது ஏமாற்றமோ அல்லது இரண்டுமோ. வெறும் ஆர்பாட்டம், ஜப்பானியர்களுக்கு நான்காம் படையாகச் சொல்லப்படுகிறது. வெளிப்படையாகச் சண்டை போடாமல் பொருளாதார நெருக்கடியினாலும், தந்திரத்தினாலும், ஜப்பான் கைப்பற்ற ஏற்பாடு செய்திருக்கிறது.

## உலகமெல்லாம் ஜப்பானை எதிர்க்கப்போகிறது.

அதிர்ஷ்ட வசமாக தாய்லாந்தும் அதன் நேசதேசத்தார்களும், தன்னைக் கவரவிடாமல் விழிப்பாகவே யிருக்கிறார்கள். அவசியமானால் தாய்லாந்து கடைசி வரையில் சண்டையிடத் தயாராகயிருக்கிறது. தற்காப்புக்காகக் கிழக்கு எல்லையில் அதன் ராணுவ பலத்தைச்சேர்த்து வைத்திருக்கிறது.

பிரிடன் முதலிலேயே எச்சரிக்கை செய்திருக்கிறது. காமன்ஸ் சபையில் அன்னிய நாட்டு மந்திரி, அந்தோனி ஈடன், ஆகஸ்டுமாதம் 6-ம் தேதி பேசின பொழுது, தாய்லாந்தின் தேசத்தையும் அதன் ஸ்வதந்திரத்தையும் குறைக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் சிங்கப்பூரை அபகரிக்க ஏற்பாடு யென்று கிரேட் பிரிடன் பொருட்படுத்துமென்றும் சொன்னார். மலேயாவும், பர்மாவும் எதிர்ப்புக்குத் தயாராகயிருக்கின்றன. பிரிடிஷ் கப்பற்படை அருகிலோ, கூப்பிடு தூரத்திலோ எதிர்க்கத் தயாராகயிருக்கிறது. பிரிடிஷ் அரசாங்கமும் சிங்கப்பூரில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

**சைனு.**—சைனு தன்படைகளை இந்தோ சைனு எல்லைப்புறத்தில் யூனன் என்ற மாகாணத்தில் சேகரித்துவைத்திருக்கிறது.

## யுனைடெட் ஸ்டேட்ஸ்.

அமெரிக்காவும் சும்மாயில்லை. ஆகஸ்டுமாதம் 6-ம் தேதி யுனைடெட் ஸ்டேட்ஸ் காரியதரிசி, 'கார்டெல் ஹல்'என்பவர் தாய்லாந்தில் ஜப்பானியர் பிரவேசித்தால் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தேசத்திற்கு, அபாயம், பயம் உண்டாக்க முதல் படியாகுமென்று சொன்னார்.

## ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியா தனக்கு அபாய நிலை ஏற்படுமென்று தெரிந்துகொண்டிருக்கிறது. "ஆஸ்திரேலியா இச்சமயம் தன் தேச சரித்திரத்தில் இதுவரை கண்டிராத வெகு, பயமான நிலைமையிலிருப்பதாக" ஆகஸ்டுமாதம் 9-ம் தேதி ஆஸ்திரேலியா பிரதம மந்திரி ஆர். ஜி. மென்ஸீஸ் (Menzies) கூறினார்." "நடப்பதெல்லாம் ஆஸ்திரேலியா நன்கு கவனித்து வருகிறது" என்று அதன் கப்பற்படை மந்திரி W. M. ஹியூஸ் சொன்னார். தொழில் இலாகா மந்திரி மிஸ்ட்டர் கர்டன் "ஆஸ்திரேலியா அபாயகரமான நிலைமையில் இருக்கிற"தாகக் கூறினார்.

**ருஷ்யா.**—கிழக்குப் பக்கத்தில் ஜப்பானை எதிர்க்க ருஷ்யாவும் தயாரித்துக்கொண்டிருக்கிறது. ஜப்பானிய சமாதானம் என்று சொல்லிக்கொண்டு வ்ளாடிவாஸ்டக் பக்கத்தில் ராணுவ பலத்தைச் சேகரிப்பதால், அங்கு எதிர்ப்பைத் தடுக்க, ருஷ்யாவும் அதைக்காட்டிலும் பெரியபடையை அங்கே சேகரித்திருக்கிறது. ஜப்பான் வடக்குப் பக்கத்தில் தாக்கினால் ருஷ்யாவில் துன்பப்பட்டிருக்கிற ஜெர்மன் படைக்கு சாதகமேற்படும் என்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது. ஆனால் வ்ளாடிவாஸ்டக் தாக்கப்பட்டால் அங்கு அமெரிக்காவுக்கும் பிரிடனுக்குமுள்ள பாத்தியத்திற்குக் குறைவு ஏற்படுமாகையால், அமெரிக்காவும் பிரிடனும் சண்டையில் கலந்துகொள்ளும்.

ஜெர்மனி யுத்தம் செய்துகொண்டிருப்பதால், பிரிடனுக்கு மேற்குப் பிரதேசத்திலும், மத்தியக் கிழக்கிலும் தற்சமயம் ஜோலி இருக்கிறது. ஜெர்மனி ருஷ்யாவில் மாட்டிக்கொண்டு திண்டாடுகிறது. இந்தச் சமயத்தில் ஜப்பான் எதையாவது அபகரிக்கலாமென்று எதிர்பார்க்கிறது. ஆனால், அது வீண் பிரயாசை. ஜப்பானின் முக்கியமான படை சைனாவில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் 3,000 மைலுக்கு அப்பால் போய் ஜப்பான் யுத்தம் செய்யவேண்டும். அப்படிச் சொல்லுவதெல்லாம் வெறும் ஆர்பாட்டமாயிருந்தாலும் இருக்கலாம்.

## ருஷ்ய—சைனா ஒப்பந்தம்.

ருஷ்யாவுக்கும் சைனாவுக்கும், ராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் ஏற்படும் போலிருக்கிறது.

## விஷியின் அடிமைத்தனம்.

விஷி என்றால் பிரான்ஸ் தேசம் பூராவும் என்று நினைக்கக்கூடாது. பிரெஞ்சுக்காரர்கள் பூராவும் அச்சு நாடுகளின் கொடுமைக்கு எதிராக சண்டை—

செய்யும்பொழுது விஷி மனிதர்கள் கோழைத்தனத்தினல் இந்தோ-சைனுவை ஜப்பானுக்கு விற்றுவிட்டார்கள். இன்னும் அதன் வடக்கு எல்லைப்புறத்தில் சைனு ஆக்கிரமிக்காமல் விஷி மனிதர்கள் பாதுகாத்தும் வருகின்றனர். மேலும் அவர்கள் வட ஆபிரிக்காவையும் நாஸிகளுக்குக் கொடுக்கத் தயாராய் இருக்கிருர்கள் போல் தெரிகிறது. அம்மாதிரி பிரெஞ்சு ஸர்க்காரை ஹிட்லர் கசக்குவதாக வதந்தி உலாவுகிறது. இதுவரையில் ஏற்பட்டிருந்த தடையை நீக்கி டாக்கருக்கும் காஸாபிளாங்காவுக்கும், விமானங்களையும், பீரங்கிகளையும் உற்பத்திசெய்து அனுப்பும்படி பிரெஞ்சு ஸர்க்காருக்கு ஜெர்மனி அனுமதியளித்திருக்கிறதாம். இப்பொழுது சண்டையை நிறுத்தி, தற்போதிய சமாதானத்தை விலக்கி, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி மூவரசு கக்ஷியில் விஷி கவர்ன்மெண்டாரைச் சேர்க்க ஜெர்மனி முயற்சிக்கிறது. ஆபிரிக்கா அரசாங்க நிர்வாக விஷயமாய் சமீபத்தில் டார்லானுக்குச் சர்வாதிகாரமும் கொடுக்கப்பட்டிருப்பதாலும், விஷி மந்திரி சபையில் ஆபிரிக்காவிலிருந்து வேகாண்டு (Weygand)ம் வந்திருந்ததாலும், இந்த வதந்தி இன்னும் ஊர்ஜிதமாகிறது. பிரான்ஸ் தேசம் சீக்கிரத்தில் துக்ககரமாண நிலைமையில் வந்துவிடுமென்று சென்ற இரவுக்கு முந்தின இரவில் (ஆகஸ்டு 12-ம் தேதி) பிடேன் செய்த ஒலிபரப்பினுல் வெளியாகிறது. இனி பிரான்ஸ் தேசத்தில் ஜனப்பிரதி நிதி சபையும் கிடையாது; ஜனநாயகமும் கிடையாது. வகுப்பு அரசாட்சியும் இனித்தலையெடுக்காது. "பழைய நிர்வாகமுறையை"ப் பின்பற்றியவர்கள் அடக்கப்படுவார்கள். அதற்குத் தக்கவாறு போலீஸும் பலப்படுத்தப்படும். இனிமேல் சர்வாதிகாரம் பூராவும் பிடேன் கையில் ஒப்புவிக்கப்பட்டு அவரிடம் ஒவ்வொருவரும் ராஜ விச்வாஸ பிரமாணம் நேராடிச்செய்ய வேண்டும். தற்காப்பு மந்திரியாக பிடேனுல் நியமிக்கப்பட்டிருக்கும் அட்மிரல் டார்லான், இனி நிலப்படை, ஆகாயப்படை, கப்பற்படை இவைகளின் பூரா அதிகாரத்தையும் வகிப்பார். இனிமேல் தொழிலாளர் சட்டமடங்கிய பொருளாதர சீர்திருத்தமும் ஏற்படும். சுருக்கமாகச் சொல்லுமிடத்து ஹிட்லருக்கு ஜெர்மனியில் அதிகாரம் அதிகரித்து வரும்பொழுது, ஹிண்டன்பர்கு எவ்விதமிருந்தாரோ, அவ்விதமே பிடேன் பேருக்கு மாத்திரம் தலைவராக இருந்து விடுவார். டார்லான் சர்வாதிகாரம் வகிப்பார்.

இதற்கு முன் பெரிய தேசமாய் விளங்கின பிரான்ஸ் இப்பொழுது அழிந்து போய்விட்டதே என்ற அனுதாபத்தாலும், ஐரோப்பாவில் நடக்கும் ஜெர்மானிய சூழ்ச்சிகள் கிளைக்க இடங்கொடாமல், அவ்விடத்தில் நடுநிலைமை ஏற்படுத்தவும், அமெரிக்கா இதுவரையில் விஷி ஸர்க்காருடன் சிநேகப் பான்மையாயிருந்தது. இப்பொழுது அதன் நடவடிக்கைகளில் வெறுப்படைந்து எந்த சமயத்திலும் தந்திரமாய் சிநேக பாவத்தை விட்டுவிடலாமென்று நினைக்கிறது. குடகோளத்தில் மார்டினிகு (Martinique)வையும், இன்னும் இதரப் பிரெஞ்சு காலனிகளையும் வியாபிப்பது சரியென்று தீர்மானித்துவிட்டது. டாக்கரை ஜெர்மனி பிடித்து விடாமல் தடுக்க பிரெஸீலிலுள்ள விமான தளங்களை வியாபிக்க, அமெரிக்கா ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

## இரானில் ஜெர்மன் ஐந்தாம்படை.

நாஸி ஐந்தாம்படையைச் சார்ந்தோர் உள்ளே பிரவேசித்ததினால் உண்டான கெட்ட நிலைமையை இரான் இன்னும் பூராவாக உணரவில்லை போலிருக்கிறது. உள்ளேயிருக்கும் பிரிடிஷ் மக்களும் ஜெர்மானியரும் ஒரே கணக்கில்தானிருக்கிறார்கள் என்று இரான் நினைப்பது பெரும் தவறு. ஏனென்றால் பிரிடிஷார் ஏற்கனவேயே அங்கிருக்கும் எண்ணெய்ச் சுரங்கங்களிலும், மற்றுமுள்ள தொழில்களில் வேலைபார்த்து வருபவர்கள். ஜெர்மானியர் யாவரும் தற்போது தான் கபடமாக உள்ளே புகுந்து வந்தவர்கள். இக் கபடச் செய்கைகளால் நடுக்கிழக்கு நாடுகளையும் பெர்ஸிய அரசனை ஷாவையும் கைப்பற்ற சூழ்ச்சி செய்கிறார்கள். இப்படி ஜெர்மானியர் நாளுக்கு நாள் அதிகமாகவே உள்ளே வந்து கொண்டிருப்பதை இரான் தடுக்காவிடில், அமெரிக்காவும், ருஷ்யாவும் சேர்ந்து ஆபத்து நேராமல் சரியானபடி தடுக்க சீக்கிரத்தில் ஏற்பாடுகள் செய்ய வேண்டியதுதான்.

## துருக்கிக்கு ஆங்கில-ஸோவியத்தின் ராஜாங்க காரியம்.

பிரிடனும் ருஷ்யாவும் சேர்ந்து துருக்கிக்கு வாக்களித்திருக்கின்றன. இதன் பிரகாரம் துருக்கியின் உரிமைகள் டார்டனல்ஸில், மான்டிரீக் திட்டப்படி, ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வேறே எந்த ஐரோப்பிய நாடும் துருக்கியை எதிர்த்தால் இவர்கள் உதவியளிப்பார்கள். ருஷ்யாவிற்கு டார்டனல்ஸைப் பிடிக்க எண்ணம் இருக்கிறதாம்! துருக்கி மூலம் ருஷ்யாவுடன் பிரிடன் சேர விரும்புகிறதென்றும் ஜெர்மானியர் செய்யும் பிரசாரத்தைத் தடுப்பதற்குத்தான் இவ்வுறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

## பிரிடிஷ் விமானப்படையின் எதிர்ப்புகள்.

பொதுவாக வடமேற்கு ஜெர்மனியும் விசேஷமாக கீல், ஹாம்பர்க், பெர்லினும் தான் பிரிடிஷ் விமானங்களுக்கு லக்ஷியங்களாக இருந்தன. 12-ம் தேதி பகலிலேயே கோலோனிலுள்ள பெரிய மின்சார யந்திரசாலைகள் தாக்கப்பட்டன. சென்ற மழைகாலங்களில் பிரிடன் மீது ஜெர்மன் விமானங்கள் படையெடுத்தது போல் பிரிடிஷ் விமானங்கள் இக்கோடைகாலம் முழுவதும் பலமாக ஜெர்மனியைத் தாக்கின. பிரிடிஷ் விமானங்களை 'பலமற்றபடை' என்றும் 'ஒரு விமானப்பகுதி' என்றும் ஜெர்மானியர் சொன்னபோதிலும் மொத்தத்தில் 300 விமானங்கள் வரை இப்போரில் ஈடுபட்டன. ஜூன் ஜூலை மாதங்களில் ரூர் ஜில்லாவில் மாத்திரம் 2,000 டன் குண்டுகள் போடப்பட்டன. இதைத் தவிர கோலோனில் 1,000 டன்களும், ப்ரெமன் பேரில் 500 டன் குண்டுகளும் வீசப்பட்டன. புதிதாகச் செய்யப்பட்ட பிரிடிஷ் குண்டுகள் ஜெர்மனியில் செய்யப்பட்டவைகளைவிட பெரியவை, சக்தியும் வாய்ந்தவை. இவைகளைப் பெர்லினுள்ளோர் பொறுக்க முடியவில்லை. அச்சமயங்களில் ஜனங்கள் முயல்களைப்போல் பயந்து ஒளிந்துகொள்ளுகிறார்களாம். பெர்லின், இங்கிலாந்திற்கு தூரத்தில் இருப்பதால் குறுகிய கோடைஇரவுகளில் தாக்குவது சிரமம் தான். இருந்தாலும் 100 டன் நிறைவரையிலும் குண்டுகள் ஒரே இரவில்

போடப்பட்டன. இப்பொழுது பெர்லினுக்கு இருபக்கங்களிலும் ருஷ்ய, பிரிடிஷ் விமானங்களால் தாக்கப்படுவதால் சேதம் இன்னும் அதிகப்படுகிறது. மேலும் வட பிரான்ஸிலும் போலிஷ் படை பிரிடிஷ் படையுடன் கலந்து விமானங்களிலிருந்து எதிர்க்கிருர்கள்.

ஜுலேயில் ஜெர்மனியின் மீது 70 விமான எதிர்ப்புகளும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் 76 எதிர்ப்புகளும் செய்யப்பட்டன. இரவு எதிர்ப்புகளைத் தவிர, பகல் வேளைகளிலும் 'பாம்பர்' விமானங்களும் 'பைடர்' விமானங்களும் படையெடுத்தன. நடுக்கிழக்கு நாடுகளில், பீரட், பெங்காஸி, ட்ரிபோலி உள்பட பல லக்ஷியங்களில் 126 எதிர்ப்புகள் நடந்தன.

## ருஷ்ய போர்முனையைத் தவிர இதர விமான நஷ்டங்கள்.

| மாதம். | | பிரிடிஷ் விமானங்கள். | ஜெர்மன் விமானங்கள். | இதாலிய விமானங்கள். |
|---|---|---|---|---|
| மே | ... | 149 | 335 | 3 |
| ஜுன் | ... | 227 | 277 | 52 |
| ஜுலை | ... | 285 | 326 | 64 |
| மொத்தம் | ... | 661 | 938 | 119 |

## அட்லாண்டிக் யுத்தம்.

காமன்ஸ் சபையில் ஆகஸ்டு 6உ மந்திரி மிஸ்ட்டர் ஸி. ஆர். அட்லி பின்வருமாறு சொன்ஞர். இங்கிலாந்திற்குச் சமீபத்தில் சரியானபடி காபந்து செய்யப்பட்டிருப்பதால் அமெரிக்கா, ஆபிரிக்கா முதலிய இடங்கள் வரையில் கடல் யுத்தம் பரவிக்கொண்டேவருகிறது. அப்படியிருந்தும் பிரிடிஷ் துறை முகங்களில் இறக்குமதி சரியானபடி செய்யப்படுகிறது. துணையுடன்கூடிய கப்பல்களும் பத்திரமாகவே வந்துசேருகின்றன. ஆகாரம், யுத்த சாமான்கள் முதலியவை சேதமில்லாமல் அயல் நாடுகளிலிருந்து வந்து சேருகின்றன. பிரிடிஷாருக்கு ஆதிக்கம் கடலில் இருக்கத்தானிருக்கிறது. கடலில் வரமுயலும் போது எதிரியும் சரியானபடி சிக்ஷிக்கப்பட்டு வருகிருன். ஜுலை மாதத்தில் வடகடலிலும், அட்லாண்டிக் கடற்கரையிலும் 2,91,000 டன் கனமுள்ள 69 விரோதிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மத்தியதரைக்கடலில், 1,68,000 டன் எடையுள்ள 23 விரோதிக் கப்பல்கள் நாசமாயின. இதோடு 30 கப்பல்கள், தாக்கப்பட்டும் பழுதாக்கவும்பட்டன.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **4—8—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **ஸார்டீனியா (Sardinia).** | | |
| | இதாலியத் துறைமுகங்களும், விமான தளங்களும்.—ஸார்டீனியா (Sardinia). | நஷ்டமில்லை. | அதிகச்சேதம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமானமிறங்கும் இடங்களும் ராணுவ நிலயங்களும்.-ஸிரெனைகா (Cyrenaica). | ...... | ...... |
| | விமானம் இறங்கும் இடங்கள்.–எல் கஸாலா (El Gazala), டிமிமி(Timimi). | ...... | தீக்களும், வெடிகளும் மூட்டப்பட்டன. |
| | துறைமுகம்.—டேர்ண (Derna), மோட்டார் போக்குவரவு சாதனங்களும் ஒர்க் ஷாப்புகளும், விமானம் கட்டும் யந்திரங்களும்—டெர்ண (Derna). | ...... | சேதமாக்கப்பட்டன. |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | சிறு கப்பல்.—மிஸுராடா (Misurata) வுக்கு அருகில், | ... | மூழ்கடிக்கப்பட்டது. |
| | விரோதி சாமான் ஏற்றும் கப்பல்கள்.—அப்போலோனியா (Appolonia) கரைக்கு அருகில். | ...... | 2 கப்பல்கள் தாக்கப்பட்டன. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி யந்திரப்படை, மோட்டார் படை, காலாட்படை, பீரங்கிப்படை. போர் அரங்கம் முழுவதும். | ...... | ...... |
| | விரோதி விமான நிலயங்கள்.—அனுவகுப்புக்குப் பின்னல். | 21 விமானங்கள். | 53 விமானங்கள். |
| **5—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விரோதித் துணைக் கப்பல்—டச்சு (Dutch)க் கடற்கரைக்கு அருகில். | ...... | 2,000 டன் நிறையுள்ள ஒரு கப்பல் நேரே தாக்குண்டது. |
| | காவல்புரியும் விரோதி கப்பல்கள்.—ஜெர்மன் கடற்கரைக்குச் சமீபத்தில். | ...... | 3 கப்பல்கள் தாக்கப்பட்டன. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 5—8—41. | (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.** | | |
| | விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய்(English Channel), வட பிரான்ஸ் (France) | 1 பகல் விமானம். | ...... |
| | விமான நிலயம்.-செர்பர்க்கு (Cherbourg)க்கு அருகாமையில் | ...... | தரையில் பல விமானங்கள் சேதமாயின. |
| | இரவில்.—ராணுவ நிலயங்கள்—மான்ஹீம் (Mannheim), பிராங்குபர்ட் (Frankfurt), கார்லஸ் ருஹி (Karls Ruhe). | ...... | பலத்த சேதம். |
| | தொழிற்சாலைகளும் இருப்புப்பாதைகளும்.—ஆஷன்(Aachen),கப்பல் கட்டுமிடம், ஆஸ்டெண்டு (Ostend). | 9 இரவு 'பாம்பர்' விமானங்கள். | ...... |
| | ஒரு பெரிய சாமான் ஸப்ளை செய்யும் கப்பல்.—நான்டிஸ் (Nantes) துறைமுகம். | ...... | இரண்டு தடவை தாக்கப்பட்டது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம், கப்பல்கள்.—பெங்காஸி (Benghazi). | ...... | ...... |
| | துறைமுகம், விமானமிறங்குமிடங்கள், மோட்டார் போக்குவரவு சாதனம், தொழிற்சாலைகள், நிலக்கரி வைக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள்.—டெர்ணு (Derna), காம்பூத் (Gambut). | ...... | தீக்களும், வெடிகளும் கிளம்பின. |
| | விமானமிறங்கும் இடம்.--எல் கஸாலா (El-Gazala) | ...... | ...... |
| | விரோதி சைனிய வாசஸ்தலங்கள்.—மிஸுராடா (Misurata) | 1 விமானம். | சேதம். |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப்படை.—போர் அரங்கம் முழுவதும் | ...... | ...... |
| | விரோதி விமானங்கள்.—விரோதி விமான நிலயங்கள். | 7 விமானங்கள். | 14விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 6—8—41. (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.— விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ...... |
| | 2 விரோதி டாங்கிகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel). | ...... | ஒரு கூட்டம் தீப் பிடித்தது. |
| | தரையிலுள்ள விரோதி விமானங்கள், விமானம் சுடும் பீரங்கிகள்.—செர்பர்க் (Cherbourg)க்கு அருகாமையிலுள்ள விமான நிலயத்தில் | 1 விமானம். | விமானம் சுடும் பீரங்கிகள் அடக்கப் பட்டன. அநேக விமானங்கள் சேதமாயின. |
| | இரவில்.—ராணுவக் கட்டடங்கள்—பிராங்க்பர்ட், (Frankfurt), மான்ஹீம் (Mannheim), கார்ல்ஸ் ரூகி (Karls Ruhe) | 8 விமானங்கள். | தீக்கள் மூட்டப் பட்டன. மிகவும் பலத்த சேதம். |
| | விமான நிலயங்கள்.—வட பிரான்ஸ் (France). | 1 விமானம். | ...... |
| | விரோதிக் கப்பல்.—நார்வீஜியன் (Norwegian) கடற்கரைக்கருகில். | ...... | ...... |
| | விமான நிலயம்.—நார்வே (Norway) ... | 1 விமானம். | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | தரையிலிருக்கும் விரோதி விமானங்கள்.—ஜெர்பின் (Gerbin). | ...... | பல விமானங்கள் சேதமாயின. |
| | விமான நிலயம்.—காமிஸோ (Comiso) ... | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | துறைமுகம்.—ட்ரிபோலி (Tripoli) ... | நஷ்டமில்லை. | ...... |
| | சைனிய வாசஸ்தலங்கள்.—பார்டியா (Bardia). | | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | எதிரியின் துணைக்காவலுடன்கூடிய கப்பல்கள்.—மத்தியதரைக்கடல் (Mediterranean). | ...... | 3 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன; 1 கப்பல் சேதமாயிற்று; 1 கப்பல் நாசமாயிற்று. |
| | **ஸிஸிலி (Sicily)** | | |
| | நீர்மூழ்கித் தளங்கள்.—ஆகஸ்டா (Augusta) | ...... | தீக்கள் மூட்டப்பட்டன; அநேகம் பேர் இறந்தனர். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **6—7—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | ருஷ்ய விமானங்களால். | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | காலாட்படை, பீரங்கிப்படை, மோட்டார் படைகள்.—*போரரங்கம் முழுவதும்.* | ...... | ...... |
| **7—8—41.** (*வியாழக்கிழமை*). | | | |
| | ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும். | | |
| | பகலில்.—நாசகாரிகளால் துணைபுரியப் பட்ட சிறிய காவல் கப்பல்—*டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகில்.* | ...... | *ஒரு கப்பல் மூழகடிக் கப்பட்டது.* |
| | விமான எதிர்ப்புகள்.—*இங்கிலீஷ் கால் வாய் (English Channel).* | ...... | 7 *விமானங்களுக்கு பெருத்த சேதம்.* |
| | இரவில்.—யுத்த தளவாட தொழிற்சாலை கள்—*எஸ்ஸன் (Essen).* | ...... | *தீக்கள் மூட்டப் பட்டன.* |
| | தொழிற்சாலைகள், ரயில் வண்டிகள் நிற்கு மிடங்கள்.—*ஹாம் (Hamm), டார்ட் மண்டு (Dortmund).* | ...... | *கட்டடங்கள் நொருக்கப்பட்டன.* |
| | எதிரி விமான நிலயங்கள், இதர லக்ஷியங் கள்.—*டென்மார்க் (Denmark).* | ...... | ...... |
| | கப்பல்கள்.—*டச்சு (Dutch)க் கடற்கரைக் கருகில்.* | ...... | 1 *கப்பல் மூழ்கடிக் கப்பட்டது. மற்றொன்று சேத மாயிற்று.* |
| | எதிரி விமான நிலயங்கள்.—*வட பிரான்ஸ் (France).* | 4 *வெடி விமானங்கள்.* | ...... |
| | இதாலிய ஆபிரிக்கா (Africa). | | |
| | துறைமுகம்.—*பெங்காஸி (Benghazi).* | ...... | ...... |
| | கப்பல் கட்டுமிடங்கள்.—*ட்ரிபோலி (Tripoli).* | ...... | *பெருந் தீக்கள் மூட்டப்பட்டன.* |
| | மோட்டார் போக்குவரத்து.—*பார்டியா (Bardia), காபுஸோ (Capuzzo) காம்பூத் (Gambut).* | ...... | *மோட்டார் வண்டி கள் சேதமாயின.* |
| | இதாலியப் படைகள்.—*கோண்டார் (Gondar).* | *சேதமில்லை.* | ...... |
| | ருஷ்ய விமானங்களால். | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | விரோதி யந்திரப் படைகள். | ...... | ...... |
| | காலாட்படை, பீரங்கிப்படை.—*போரரங்கம் முழுவதும்.* | 14 *விமானங் கள்.* | 21 *விமானங்கள்.* |
| | பேர்லின் (Berlin). | *நஷ்டமில்லை.* | *சேதம்.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **8—8—41.** *(வெள்ளிக்கிழமை).* | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **பகலில்.**—*விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய்* (English Channel). | 10 *பகல் 'பைடர்கள்'* | 18 *பகல் 'பைடர்கள்'.* |
| | **இரவில்.**—**கப்பல் கட்டுமிடங்கள், கப்பல் தங்குமிடங்கள்**—*கீல்* (Kiel), *ஹாம்பர்க்* (Hamburg). | ...... | ...... |
| | **இரண்டு மறைந்துபோன ஜெர்மன் ஸப்ளை கப்பல்கள்.**—*பெர்கனு* (Bergen)*க்கு வடக்கேயுள்ள நார்வீஜியன் சிறு துறைமுகத்தில்.* | ...... | *கப்பல்கள் தாக்கப்பட்டன.* |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | **துறைமுகம்.**—*கடானியா* (Catania). | ...... | 2000 *டன் நிறையுள்ள கப்பல் சேதமாயிற்று.* |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | **எதிரி 'பான்ஸர்' படைகள், காலாட் படை, விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.**—*போரரங்கம் முழுவதும்.* | 12 *விமானங்கள்.* | 14 *விமானங்கள்.* |
| | **இருப்புப் பாதைகள், ராணுவ லக்ஷியங்கள்.**—*பெர்லின்* (Berlin). | 1 *விமானம்.* | *தீக்களும், வெடிகளும் மூட்டப்பட்டன.* |
| **9—8—41.** *(சனிக்கிழமை).* | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | **பகலில்.**—**விமான எதிர்ப்புகள்**—*வட பிரான்ஸ்* (France). | ...... | ...... |
| | **ராணுவ நிலயங்கள்.**—*கிராவிலின்ஸு* (Gravelines) *க்கு அருகாமையில்.* | ...... | 11 *விமானங்கள்.* |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | **கப்பல் கட்டுமிடங்கள்**—*ட்ரிபோலி* (Tripoli). | ...... | *பெருந்தீக்கள் மூட்டப்பட்டன.* |
| | **துறைமுகம், மோட்டார் வண்டிகள் தங்குமிடம்.**—*பார்டியா* (Bardia). | ...... | *சேதமாயிற்று.* |
| | **ரயில் வண்டிகள் பாதை மாறுமிடங்கள். துறைமுகம்.**—*பெங்காஸி* (Benghazi). | ...... | ...... |
| | **துறைமுகம்.**—*டெர்ரு* (Derna). | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **9—8—41.** | *(சனிக்கிழமை)*—*தொடர்ச்சி.* | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)**—*தொடர்ச்சி.* | | |
| | விமானங்கள் இறங்குமிடங்கள்—*எல் கஸாலா* (El Gazala). | ...... | *வண்டிகள் நாசமாயின; தீக்கள் மூட்டப்பட்டன.* |
| | சைனிய வாசஸ்தலங்கள், மோட்டார் போக்குவரத்து வண்டிகள், பெட்ரோல் எண்ணெய் ஏத்திச்செல்லும் வண்டிகள்.-*மிஸுராடா* (Misurata)*க் கருகில்.* | ...... | |
| | யுத்த தளவாடங்கள் சேமித்துவைக்குமிடங்கள்.—*பியூரட்* (Buerat). | ...... | *வெடித்து நாசமாயின.* |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | ஒரு வியாபாரக் கப்பல்.—*ஸிராக்யூஸ்* (Syracuse). | ...... | ...... |
| | 'காஸோமீடர்'.—*அகஸ்டா* (Augusta). | 1 *விமானம்* | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | விமான நிலயம்.—*எலூஸிஸ்* (Eleusis) | ...... | *தரையிலிருந்த பல விமானங்கள் நாசமாயின.* |
| | காரிந்த் (Corinth). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | எதிரி 'பான்ஸர்' துருப்புகள், காலாட் படை, விமானப்படை—*யுத்தரங்கம் பூராவும்.* | 25 *விமானங்கள்.* | 45 *விமானங்கள்.* |
| **10—8—41.** | (ஞாயிற்றுக்கிழமை). | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | *பகலில்.*—விரோதிக் கப்பல்கள்—*பிரெஞ்சு* (Franch)*க் கடற்கரைக்கருகில்.* | 2 *வெடிவிமானங்களும்* 1 *'பைடர்' விமானமும்.* | 1 *கப்பல் எரிக்கப்பட்டது.* 1 *விரோதி 'பைடர்' விமானம்.* |
| | விமான எதிர்ப்புகள்.—*வட பிரான்ஸ்* (France). | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | மோட்டார் போக்குவரத்து, பழுது பார்க்குமிடங்கள், ரயில் வண்டிகள் நிறுத்துமிடம், கப்பல் கட்டுமிடங்கள்.—*பெங்காஸி* (Benghazi). | ...... | *குண்டுகளும், தீக்களும் மூட்டப்பட்டன.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—8—41.** | (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa)**—தொடர்ச்சி | | |
| | **விமானம் தங்குமிடம்.**—பெங்காஸி (Benghazi)க்குத் தெற்கில். | ... | ...... |
| | மோட்டார் போக்குவரத்து.—டோப்ருக்-பார்டியா ரோடு, (Tobruk-Bardia.) | ... | பல வண்டிகள் நாசமாயின. |
| | தொழிற்சாலை கட்டடங்கள்.—.பார்டியா (Bardia) | ... | ...... |
| | துறைமுகம், மின்சார உற்பத்திசாலை.—ட்ரிபோலி (Tripoli). | ... | ...... |
| | விமானமிறங்குமிடம்:—கஸாலா (Gazala). | நஷ்டமில்லை. | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | ஒரு கப்பல் (1,300 டன் கனமுள்ளது).—ஸிரகூஸ் (Syracuse) துறைமுகம். | ... | நேராகத் தாக்கப்பட்டது. |
| | **விமானம் நிலயம்.**—ஜெர்மெயின் (Germaine). | ... | 1 விமானம். |
| | நிலக்கரிக் கப்பல்.—லம்பெடுஸா (Lempedusa). | நஷ்டமில்லை. | மூழ்கடிக்கப்பட்டது. |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | விரோதி 'பான்ஸர்' படை, காலாட்படை, விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்.—போரரங்கம் முழுவதும். | ... | ...... |
| | பெரிய ரயில்வே பாலம்.—செர்னோவோடி (Chernovody). | ... | பாலம் உடைக்கப்பட்டது. |
| | கப்பல்கள்.—கான்ஸ்டான்ஸா (Contanza). | 25 விமானங்கள். | 39 விமானங்கள். |

---

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **5—8—41.** | (செவ்வாய்க்கிழமை). | | |
| | பகலில்.—ஸ்வல்ப விமானப்போர் ... | ...... | ...... |
| | இ ர வி ல்.—இங்கிலாந்தின் (England) கிழக்குக்கரை, ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சொற்பச்சேதம், சிலர் கொல்லப்பட்டனர். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **5—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) | ... 3 "பாம்பர்" வெடி விமானங்கள். | பொது மக்களுக்கு மட்டில் சேதம். |
| **6—8—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தி (England)ல் கிழக்கிலும், தென்கிழக்கிலும். | 2 விமானங்கள். | ...... |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ.—(Moscow) | ... 9 விமானங்கள். | ...... |
| | **பாலேஸ்டின் (Palestine).** | | |
| | ஹைபா (Haifa) | ... ...... | சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை. |
| | **எகிப்து (Egypt)** | | |
| | சூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம் ... | ...... | 30 பேர்கள் கொல்லப்பட்டனர்; 35 பேர்கள் காயமடைந்தனர் |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | ... 1 விமானம்; மற்றவை விரட்டப்பட்டன. | சேதமில்லை. |
| **7—8—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | சில சிதறப்பட்ட இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியாவிலும், (East Anglia), வடகிழக்கு ஸ்காத்லாந்திலும் (North-East Scotland). | ...... | சொற்பச் சேதம் சிலருக்குக்காயம். |
| | வடகிழக்கு ஸ்காத்லாந்தில் (North-East Scotland) ஒரு பட்டணம்.— | ...... | பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **8—8—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—கிழக்குக் கடற்கரை ஓரங்கள். | 1 விமானம். | குண்டுகள் போடப் படவில்லை. |
| | இரவில்.—கிழக்கு இங்கிலாந்து (England), வடகிழக்குக்கரையில் ஓர் இடம். | ...... | சொற்பச்சேதம்; ஒருவருக்கும் காயமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸுயஸ் கால்வாய் (Suez). | ... ...... | 11 பேர் கொல்லப் பட்டனர்; 7 பேர் காயமடைந்தனர். |
| **9—8—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—இங்குமங்கும் சில இடங்கள்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), கிழக்கு ஸ்காத்லாந்தி(Scotland)ல் ஓர் இடம். | ...... | சொற்பச்சேதம், சிலருக்குக்காயம். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 8 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| **10—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓர் இடம்—ஸ்காத்லாந்து (Scotland). | ...... | சேதமும் நஷ்டமுமில்லை. |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 6 விமானங்கள். | சொற்பச்சேதம் தான். |
| **11—8—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | அன்று முழுவதும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta). | 2 விமானங்கள். | சேதமில்லை. |
| | **எகிப்து (Egypt).** | | |
| | அலெக்ஸாண்டிரியா (Alexandria). | ...... | 4பேர் காயமடைந்தனர்; சிறிது சேதம் தான். |
| | சூயஸ்கால்வாய் (Suez). | ...... | 8பேர் கொல்லப் பட்டனர்; 13பேர் காயமடைந்தனர். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow). | 2 விமானங்கள். | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## பெர்ஸியாவின் ஆபத்தான நிலை.

நமது நிலயத்து யுத்த அறிக்கை இன்னும் பெர்ஸியாவுக்குச் சென்றதாகத் தெரியவில்லை. ஆனால் சில நேயர்களுக்கு அங்கே இருக்கும் சிநேகிதர்கள் மூலம் கடிதப்போக்குவரவு ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் யாவரும் பின்வரும் விஷயங்களை கவனிப்பது அவசியம். ஜெர்மானியர் உள்ளே பிரவேசிக்கும் விஷயமாக, ஒரு வருஷத்திற்கு முன்னிருந்த ருமேனியா, பல்கேரியா தேசங்களை இரானுக்கு ஒப்பிடுவது சகஜம் போல் காணப்படுகிறது. அவ்விரண்டு தேசங்களும் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்படும்போழுது படிப்படியாக மூன்று மாறுதல்கள் அடைந்தன. இவைகளை அங்கிருக்கும் ஜனங்கள் அறிந்து கொள்ளாததினால்தான் இப்பொழுது மிகவும் தீன நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆக்கிரமணத்தில் மூன்று விதமான மாறுதல்கள் (1) ஜெர்மனியில் தேற்சிபெற்றவர்களை இரானில் முக்கியமான தொழிற்சாலைகளில் ஜெர்மனி அமர்த்துவது, (2) பிரசார ஏஜெண்டுகளென்றும், ஐந்தாம்படை வகுப்பாளர் என்றும், பெரிய மனிதர்களையும், உயர்ந்த சம்பளம் பெறுகிறவர்களையும் உபயோகிப்பது, (3) யாத்ரீகர்கள் என்ற பெயரினால் முதல் சைனியப் பகுதியை அனுப்புவதும்தான். இதுவரை கிடைத்த அறிக்கைகளிலிருந்தும், மிஸ்டர் ஈடன் பார்லிமெண்டில் செய்த உபன்யாசங்களிலிருந்தும், இரான் மூன்றுவது நிலைக்கு வந்துவிட்டது என்று பிரகாசமாகத் தெரிந்ததுதான்.

பல தடவைகளில்தான் நடுநிலைமை வகிக்கிறதாக இரான் சொல்லியிருக்கிறது உண்மையே. ஆனால் ஜெர்மனியால் செய்யப்பட்ட பொருளாதார மேன் பார்வை, ராஜீய ஆதிக்கத்தை அடைய ஒரு தந்திரம் என்பதை இரானிலுள்ளோர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜெர்மனியிலிருந்து வெளியாகிற ராஜீய-பொருளாதார வியாசங்களையும் உள் அர்த்தத்தோடு படிக்கவேண்டும். அவைகளில் ஜெர்மனி பெர்ஸியன் குடாவரையிலுள்ள மத்தியக்கிழக்கிலுள்ள துருக்கி, இரான், ஸிரியா, இராக் நாடுகளின் பொருளாதார மேன்பார்வையைத் தான் வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் மோசக் கருத்திற்கு திருஷ்டாந்தம் இராக்கில் ரஷீத் ஆலியின் கதியும், ஸிரியாவிலிருந்த விஷி ஸர்க்காரின் நிலையும்தான். துருக்கியில் ஏற்கனவே ஜெர்மனியின் பலாத்காரம் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகள் முறையிடுகின்றன. ருமேனியா பல்கேரியா நாடுகள், முதலில் சல்லிசாக இருந்த பொருளாதார ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி பிறகு ஜெர்மனியுடனேயே பிணைக்கப்பட்டதால் அடிமைகளாக்கப் பட்டன.

இராக், ஆப்கனிஸ்தானம் முதலிய நாடுகள் இந்தியாவுக்குச் சமீபத்தில் இருப்பதால்தான் நாம் இவைகளையெல்லாம் பிரசுரிக்கிறோம்.

**விஷி சமாதானம்.**—மற்ற தேசங்களோடு ஜெர்மனி செய்து கொள்ளும் சமாதானப் பேச்சுகளும், ஒப்பந்தங்களும் வெறும் ஏமாற்றம்தான். முடிவில் அந்த நாடுகளுக்கு விபத்துதான். அம்மாதிரி ஜெர்மன் அனுஷ்டானங்களை சிஷ்யன்போல் பின்பற்றும் ஜப்பான் குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாக அதிக சாமர்த்தியமாக காரியங்களைச் செய்துவருகிறது. இண்டோ-சைனாவிலுள்ள விஷி ஸர்க்காருடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்று சொல்லி விபரீத முடிவை உண்டாக்க யத்தனப்படுகிறது.

1. இப்பேச்சு சமாதானமுறையில் இல்லை. பிடேன் ஒப்புக்கொண்டபடி பலவந்தங்கள். பயமுறுத்தல்களால் இன்னும் பலப்படுத்திற்று. இதற்குப் பயந்து பிரெஞ்சுக்காரர்கள் பணிந்துவிட்டனர். இதனால் ஜப்பானுக்கு அதிக லாப மானாலும் பிரெஞ்சுக்காரர்களுக்கு தயவு காட்டியதுபோல் அபிநயிக்கப்படுகிறது. அச்சுநாட்டு வழக்கப்படி முன்னதாகவே ஜப்பானியப் பத்திரிகைகளும் இண்டோ சைனாவைப்பற்றி குறைகூற ஆரம்பித்தன !

2. அப்பொழுது ஏற்படுத்திய பத்திரத்தில் 'பொது-க்ஷேமப்பிராந்தியம்' என்று இருமுறை காணப்படுகிறது. அதுமுதல் இதுவரை பொது-க்ஷேமத்திற்குப் பிரயத்தினம் ஒன்றும் இல்லை. ஆகையால் இப்பதங்களுக்குச் சமீபத்திலுள்ள நாடுகளை ஜப்பான் ஸ்வீகரிப்பது என்ற பொருள் ஏற்படுகிறது.

3. அல்லது இண்டோ-சைனாவை மற்றவர்கள் எதிர்க்காமல் காப்பது என்ற பரோபகார எண்ணம் ஜப்பானுக்கு இருக்கிறதாக நினைக்கலாம். அப்படியானால், நார்வே, டான்சிக், ருமேனியாவை ஜெர்மனி காப்பதாகச் சொல்லுவது போல்தான் முடியும்.

4. ஒருக்கால் இண்டோ-சைனாவின் எல்லைகளையும் ராஜ்ஜியத்தையும் மற்றவர்கள் பிடிங்கிக்கொள்ளாமல் ஸ்வதந்திரத்தை ஜப்பான் பார்த்துக் கொள்ளுவதானால் பிரான்ஸுக்குச் சொந்தமான துறைமுகங்களையும், விமான தளங்களையும் ஜப்பான் ஏற்கனவே பிடிங்கிக்கொண்டது ஏனோ.

5. இண்டோ-சைனாவோடு ஒற்றுமையுள்ள நாகரீகம், சரித்திரம், பொருளாதார சம்பந்தங்களை ஸ்திரப்படுத்துவதாக ஜப்பான் சொல்லுவதும் பரிகசிக்கத்தக்கதே. இதைப்போல் மலாய் நாட்டுடன் பொருளாதார ஒப்பந்தம் செய்யவும் தீர்மானிக்கும்போல் இருக்கிறது. மஞ்சூரியா, சைனாவை விழுங்கியது போல் விழுங்கத்தான் ஜப்பான் இவ்வொப்பந்தங்கள் செய்துகொள்ளுகின்றன. ஆகவே பொது க்ஷேமம் என்பது வஞ்சகமான பொருள் கொண்டதுதான்.

**அயலார்கள்.**—இவ்விதமெல்லாம் ஜப்பான் ஏன் ஏமாற்றவேண்டும். ஆனால் இதைக்கண்டு ஒருவரும் ஏமாற்றப்படவில்லை. அக்கம் பக்கத்திலுள்ளோர் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். பிரிடனும் அமெரிக்காவும் ஒரே சமயத்தில் ஜப்பானிய ஐவேஜிகளைக் கட்டுப்படுத்தின. டச்சுக்கிழக்கு இந்திய அரசாங்கமும் அம்மாதிரி செய்துவிட்டது. மிஸ்டர் ஸம்நர் வெல்ஸும் விஷி ஸர்க்காரை

ஸ்வதந்திரத்திற்கு விரோதமான ஜெர்மனி முதலியோருக்கு தின்பண்டம்போல் உதவிகளை மேல் மேலும் கொடுக்கக்கூடாதென்று கோபமாயும் பரிகாசமாயும் சொல்லிவிட்டார்.

அமெரிக்கா, பிரிடன், சைனு, டச்சுக்கிழக்கு இந்தியத் தீவுகள் ஒன்று சேர்ந்து தான் இருக்கின்றன. நாளது வரை ஜப்பானைத் தாய்லாந்தில் முன்னேற விடாமல் செய்திருக்கிருர்கள். ஐரோப்பாவில் கழிவு கெட்டதும், பயங்குள்ளியுமான விஷியிடமிருந்து இண்டோ-சைனுவைப் பிடிப்பது சுலபம். மர்ம நிலையிலும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தாய்லாந்தில் நாஸி தந்திரத்தைக் கையாளுவது முடியாது. இது இன்னும் 2 வாரங்களில் தெரியவரும். நடக்கும் விஷயங்களும் விபரீதமாக நடக்காது என்ற நம்பிக்கையை உண்டுபண்ணுகின்றன.

1. தாய்லாந்து, தீவிரமான தேசீய உணர்ச்சி கொண்டதாயும், ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றுவதில் தீர்மானமாயும் இருக்கிறது.

2. சில மாதங்களுக்கு முன்புதான் பிரிடனுடன் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. அது முதல் அதற்குத் தேவையான எண்ணெயை பிரிடன் அனுப்புகிறது.

3. ஜெர்மனியோ, ஜப்பானே மற்ற தேசங்களோடு செய்துகொண்ட ஒப்பந்தம்போலல்லாது பிரிடன் செய்துகொண்டது உண்மையில் சமரசமானது. இதை தாய்லாந்துக்காரர்களும் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

4. இங்கிலாந்து-தாய் ஒப்பந்தம் அன்யோன்யமானது. பிரிடன் மலாய் நாட்டில் செய்யும் முஸ்தீபுகளைக்கண்டு இவர்கள் பயப்படவில்லை. ஏனெனில் தாய்நாட்டிலுள்ளோரின் அபிப்பிராயமும் சேர்ந்திருக்கிறது.

5. ஏனெனில் சார்டல் ஹல்லும், மிஸ்டர் ஈடனும் மனதில் ஒன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை. முடித்து வைக்க முடியாததைப்பற்றி வாக்களிக்கவும் இல்லை. ஜப்பானைத் தாய்லாந்திலிருந்து அகன்று போகும்படி வியக்தமாகச் சொல்லிவிட்டார்கள்.

## மத்தியதரைக்கடல்.

ருஷ்யச் சண்டையில் அதிக கவனம் செலுத்துகையில் மத்தியதரைக் கடலைப்பற்றி கொஞ்சம் மறக்கக்கூடும். ஆனல் ஒரு கோடியிலிருந்து மற்ருெரு கோடிக்கு துணைகொண்ட கப்பல்கள் சேதமில்லாமல் அனுப்பப்படுகின்றன. இதாலியரின் கப்பற்படையில் பெரும்பாகம் சிற்சில குறுகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவை நம் கப்பல்களை எதிர்க்க வசதி இருக்கிறது. இதாலியர் சிறு கப்பல்களைக்கொண்டு 27 மணி நேரம் எதிர்த்த போதிலும் பிரிடிஷ் சாமான்கள் சேதமன்னியில் துறைமுகங்களுக்குச் சேர்க்கப்பட்டன. இதாலிய பெரும் கப்பல்கள் தலைகாட்டவேயில்லை. பிரிடிஷ் கப்பற்படைக்கு கடலில் இவ்விதமாகவெல்லாம் ஆதிக்கமிருப்பதால் ஸார்டீனியா, ஸிஸிலி, கிரீட்டின் தென்பாகங்களிலும் எதிரியின் விமான எதிர்ப்பை நாம் பொருட்படுத்த

வில்லே. மத்தியதரைக்கடலில் நடு பாகத்திலும், கிழக்கிலும் ஆதிக்கம் இருப்பதாக ஜெர்மனி சொல்லுவது பொய்தான். ஆகையால் கொஞ்ச காலம் நிலப்படைகளாலும், மிஞ்சியிருக்கும் இதாலியக் கப்பற்படையின் உதவியாலும் மத்தியதரைக் கடலில் எதிர்ப்பு இருக்கத்தானிருக்கும். அதைச்சரியாக தடுத்து வருவதால், ஆபிரிக்கா, லெவாண்டு, எகிப்து முதலிய நாடுகளுக்கு ஹிட்லர் பந்தோபஸ்துடன் சாமான்கள் அனுப்ப முடியவில்லே. இதற்காக ஸூயெஸ் கால்வாயையும், நடுக்கிழக்கு நாடுகளேயும் தரைமார்க்கமாகத்தான் எதிர்க்க முடியும். அப்படிச்செல்ல, ருஷ்யாவை ஜயித்த பிறகு, நடுக்கிழக்கு நாடுகளேச்சுற்றி, நமக்குச் சொந்தமான இடங்களே வளேத்துக்கொண்டு போகவேண்டும். அப்பொழுதுதான் மத்தியதரைப் பிரதேசம் நம்மிடம் தங்காமல் போகும். ஆனுல் இவையெல்லாம் நடக்காத எண்ணங்கள்.

## யுத்தம் இரு இடங்களிலா பத்து முனேகளிலா?

இப்பத்திரிகையில் சில வாரங்களுக்கு முன்பு ருஷ்யாவைப்பற்றிய முதல் வியாசத்தைப் படித்தவர்களுக்கு, ஜெர்மனி இரு முனேகளில் சண்டை செய்வதால் தோற்றுவிடாது என்று தெரியவரும். ஆனுல் விபரீத அரசாட்சிக்கு வஞ்சகத் தலேவனுன ஹிட்லர், பிரிடிஷாருக்குக் கெடுதி செய்ய பல இடங்களில் சண்டை துவக்கி, நேசதேசத் துருப்புக்களே கலேத்து நடுநிலேமையிலிருப்பவர்களே பயமுறுத்த ஏற்பாடு செய்வான். ஏனென்ருல் உகைத்திலில்லாத பெரிய ராணுவங்களே வைத்துக்கொண்டிருப்பதாக நினேக்கிருன்.

துருக்கி, ஸ்பெயின், இரான், அமெரிக்கா நாடுகளெல்லாம், ஜெர்மானியரிடமிருந்து அதிக ஆபத்துக்குள்ளாகியே இருக்கின்றன. இவையும், விசேஷமாக நேச நாடுகளும் அலக்ஷியமாக இருக்கக்கூடாது. ஏனெனில் ஹிட்லர் உலக ஆக்கிரமணம் என்ற பைபித்தியம் பிடித்துத் திரிகிருன். அதற்குத் தேவையான ராணுவங்களும் இருக்கின்றனவாம். சும்மாயிருந்துகொண்டு எப்படியோ நடக்குமென்று இருக்கக்கூடாது.

## பூ-தகனம்.

ருஷ்யாவில் மூன்ரும் தடவை பெரிய ஜெர்மன் எதிர்ப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒருவாரம் ஆகியும் ஜெர்மானியர் ஒருவிதமான வெற்றியடைந்ததாகத் தெரியவில்லே. ஆனுல் பெர்லின் அறிக்கைகள் மாத்திரம் ருஷ்யருக்கு அபார நஷ்டமென்றும், முன்னேவிட ஒடெஸ்ஸா, லெனின்கிராட்டிற்கு ஆபத்து அதிகமாகி விட்டதென்றும் தெரிவிக்கின்றன. நமது இக்குறிப்புகள் வெளிவருவதற்குள் ருஷ்யர்களுக்கு சற்று தோல்விபோல் காணப்படலாம். ஜெர்மானியருக்கு ஒருவித லாபமும் ஏற்பட ஹேது இல்லே. ருஷ்யர்கள், பலமாகவே எதிர்க்கிருர்கள். ஜெர்மானியரும் 'மூலபலச்சண்டை' என்ற முறையைப்பிடித்துக்கொண்டு தயாரில்லாத பொது மக்கள் பேரில் கணக்கில்லாத ஆயுதங்களேயும் குண்டுகளேயும் வீசுகிருர்கள் இதை விடப்பெரியதாக 'முழுத்தடுப்பு' என்ற எதிர்முறையை ருஷ்யர்கள் அவலம்பித்திருக்கிருர்கள். இது ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லே.

ருஷ்யாவிலுள்ள சொத்துக்களும் வயல்களும், எண்ணெய்க் கிணறுகளும், தொழிற்சாலைகளும் சேதமாக்கப்பட்டனவென்று பெர்லின் அதிகாரிகள் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ருஷ்யர்கள் வீரத்தனமாயும் சொந்தசொத்துக்களை எரித்தும் சண்டையிடுகின்றனர். எதிர்த்து முன்னேறிவரும் ஜெர்மானியருக்குப்போகும் இடங்களில் ஆகாரம், ஜலம், போக்குவரவு சாதனம், மோட்டார் முதலிய யந்திரப்படைகளும் எண்ணெய் முதலியவை ஒன்றும் கிடைக்கவில்லை. ஈவு இறக்கமின்றி ருஷ்யர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

ருஷ்யப்படையும், ஸ்டாலின் உபதேசப்படி பூ-தகன முறையைச் செய்கிறார் கள். நெருப்பும் கலப்பையும்கொண்டு எல்லாம் அழிக்கப்படுகின்றன. ஜெர்மானியர் வந்தபொழுது செர்கோவிட், லிபா, மின்ஸ்க், டர்னபால் எல்லாம் பாழாகிக்கிடந்தன. ருமேனியர்கள் பிடித்தபோது கிஷ்ணவ் பட்டிணத்தில் எரியும் நெருப்பை அணைக்க 3 நாட்கள் பிடித்தன. வருஷத்திற்கு 30,000 டன் இரும்பு சாமான் செய்யும் ஸிமன்ஸ்-மார்டின் தொழிற்சாலையில் 2 கட்டடம்தான் மிஞ்சியிருந்தன.

இதற்குள் ருஷ்யா முழுவதிலும், முக்கியமாகச்சண்டை நடக்கும் இடத்திற்கு சமீபத்தில் போக்குவரவு கெடுதலடையாததால் 100-க்கணக்கான மைல்கள் வடக்கேயும் கிழக்கேயும், சாமான்கள் காபந்துடன் அனுப்பப்படு கிறது. ருஷ்யாவில் எதிரி வருவதற்குள்ளேயே அருவடை செய்தும், தானியங் களை எடுத்தும் எதிரி கைப்பற்றாமல் அப்புறப்படுத்தப்படுகிறது. யூக்ரேன் பூரா புருஷர்கள் இரவும் பகலும் இம்மாதிரி வேலைசெய்கிறார்கள். கிரிமியாவிலுள்ள பொதுப்பண்ணையில் அருவடையாகி அக்கம் பக்கங்களுக்கு ஏற்றப்பட்டது. புருஷர் கள் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் ஸ்திரீகள் வயல்வரப்புகளிலும், மோட்டார், ரயில் வண்டிகள் இருக்குமிடங்களிலும் வேலைசெய்கிறார்கள். ஆகையால் ருஷ்யர் கள் சண்டையில் ஜயித்தால் படும் பாட்டிற்கு பொருத்தமானதாக ஆகும்.

---

# நவீன யுத்தத்தின் அபார வேகம்.

ஹிட்லர் ருஷ்யாவை எதிர்க்கும் முன்னே, ஏன், அதற்கு வெகு காலம் முன்னமேயே, அறியாத சிலரைத் தவிர அல்லது அறியவேண்டாம் என்று பிடிவாதமிருக்கும் சிலரைத் தவிர ஹிட்லருக்கு உலகத்தைப் பூரா ஆக்கிரமிக்க வேண்டுமென்ற எண்ணம் யாவருக்கும் தெரியும். தற்சமயம் ஹிட் லரை நெபோலியனுக்கு ஒப்பிடுவது சரியானதுதான். கொடுங்கோல் மன் னர்கள் முடிவில் அநேகமாய் ஏமாந்து தான் போயிருக்கிறார்கள். நெபோலி யன் மாஸ்கோவை நோக்கிச் சென்று, பட்டிணத்தை எதிர்த்த பிறகு, மடிந்த சைனித்தைப் பனிப்பாங்கான வழியாக ஐரோப்பாவுக்கு மீட்டிக்கொண்டு வந் தான். அதற்குள்ளாகவே ஐரோப்பா அவனுக்கு விரோதமாக ஒன்று சேர்ந்து

விட்டது. அவ்விதமே தோற்று ஹிட்லரும் திரும்பக்கூடும் என்று தைரியமாக நினைக்கக்கூடும். ஆனால் இவ்வித சரித்திர திருஷ்டாந்தங்களில் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. ஏனெனில் நெபோலியனுக்குப் பிறகு சண்டை வெகு விரைவாகச் செல்லுகிறது. அவனைத் தோற்கடிக்க 20 வருஷங்கள் பிடித்தன. தற்சமயம் இவ்வுலகம் அவ்வளவு காலம் சண்டையில் ஈடுபடுமென்பது சாத்தியமில்லை.

நெபோலியனின் யுத்த முறையிலிருந்து நாம் அறியவேண்டிய நுட்பமான பாடம் ஒன்றிருக்கிறது. சண்டையிடும் தந்திரத்திற்குப் புதுக்கோட்பாடுகளை அவன் திட்டம் செய்யும்பொழுது பிரஷ்யா வீரர் ஒருவர் பின்வருமாறு எழுதினார் :—“என்னுடைய பால்யத்தில் ஒரு சதுரயோஜனைகூட பிடிக்காமலும், இழக்காமலும் கோடைகாலம் முழுவதும் முன்னும் பின்னுமாகப் போய்க் கொண்டிருப்போம். பிறகு மாரி காலத்தில் கூடாரங்களுக்கு வந்து விடுவோம். அப்பொழுது, நெபோலியன் துணிகரமாய், ராணுவ நிலைகளை அறியாமல் புலாயினிலிருந்து ஹாம்பட்டிணத்திற்கும் அங்கிருந்து மொரேவியாவிற்கும் வேகமாய் வந்து டிஸம்பர் மாதம் முழுதும் சண்டை போடுகிறான். அவன் சண்டைத் தந்திரத்தின் போக்கெல்லாம் மிக பிழையுள்ளது”. அவ்விதமே ஹிட்லரின் ராணுவ தந்திரங்களும் வழக்க விரோதமானவை. பிரெஞ்சுக்காரர்களால் தாக்கப்படாமல் போக்குவரவு சாதனங்கள் காப்பாத்தப்படவேண்டுமென்று சொன்ன கக்ஷித் தலைவர்களையெல்லாம் ஹிட்லர் அவமதித்தான். பிரான்ஸில் ஸெடான் வழியாகப் பிளந்து சென்று அபிவில்லி வரை விரைவாகச் சைனியத்தை அனுப்பினான். நெபோலியனும் இதேமாதிரி செய்தான். அவன் குதிரைப்படையினால் சண்டை செய்து ஹாம்பர்க், போகும்வரை நிற்காது முன்னேறினான். எதிரிகள் சிதறிப்போக விமானக் குடைகளையும், சைனிய வாஹிகளையும் ஹிட்லர் விடுவித்தார். ஆனால் நெபோலியனோ சத்துருக்களின் பின்னால் சில மத்தளச் சப்தங்களைக் கிளப்பி அதனால் தன் வருகையைத் தெரியப்படுத்தி எதிரியைப் பயந்து சின்னாபின்னமாகும்படி செய்தான். மேலும், நெபோலியனின், வேகமாகச் செல்லும் மத்தளங்களுக்கு ஒப்பானதுதான் ஆகாயப்படை தரைப்படை இவைகளின் சேர்க்கை. இதைக்கொண்டு ஹிட்லர் ஒரு மணிக்கு 200 அல்லது 300 மைல்கள் வீதம் தன் பீரங்கிப் படைக்கு விமானப் படையைகூட உதவச் செய்தார்.

ஆக ஜெர்மானியர் கையாண்ட நூதன முறைகளின் பயனென்ன? இதற்கு விடை ஒரு வார்த்தை தான். வேகம் முழுச் சண்டையும் திடுக்கிடும்படி துரிதப்படுத்தப்படுகிறது, சென்ற யுத்தத்தில் தனிச் சண்டைகளே பல நாட்கள், வாரங்கள்கூட பிடித்தன. இப்பொழுதோ ஹிட்லர், தேசத்தையே அந்தக்காலத்திற்குள் பிடிக்க முயலுகிறார். சென்ற ஐந்து வருஷகாலத்திற்குள் சண்டையின் வேகம், சென்ற நூறு வருஷங்களை விட அதிகமாகிவிட்டது. பிளீட்ஸ் கிரிக் (மின்னல்படை) என்பது எவ்விதம் அபிவிருத்தியடைந்தது என்பதைக் கொஞ்சம் கவனிப்போம். ஜெர்மானியர் முதலில் ஸ்பெயின் தேசத்தில் பரிக்ஷீத்தார்கள். 1938-ம் வருஷத்தில் ஜெர்மன் டாங்கிகள்

ஸ்பெயின் கடற்கரை வழியாக தினம் 4 மைல் வீதம் க்ளானகன் முனையைத் துளைத்துச் சென்றன. போலீஷ் சண்டையில் வார்ஸாவைத் தாக்கும் பொழுது 150 மைல் தூரம் வரை, தினம் 12 மைல் வீதம் போக முடிந்தது. இங்கிலீஷ் சானல் கரையில் ப்ளாண்டர்ஸில் 14 மைல் வீதமும், பிரான்ஸில் மூன்று நாட்கள் வரை தினம் 30 மைல் வீதமும் சென்றன. லிபியாவில் ஜெனரல் வேவல் இதை இன்னும் துரிதப் படுத்தினர். அங்கேயே ஜெர்மானியர் எதிர்க்கும் பொழுது 12 நாட்கள் வரை 30 மைல் வீதம் சென்றார்கள். ஆகவே ஸ்பெயினில் 4 மைல், போலந்தில் 12, லிபியாவில் 30 மைல். இதைச் சற்று நினைத்துப் பாருங்கள்.

சண்டையின் வேகத்தால் இப்படி எண்ண முடியாதபடி வேகம் அதிகப் பட்டு வருகிறது. பல வாரங்கள், மாதங்கள், வருஷங்களில் செய்யப் பட்ட வேலையை ஒரு நாளில் முடிக்க வீரர்கள் உத்தேசிக்கலாமென்று தெரி கிறது. அதாவது நவீன யுத்தங் களில் ஜயத்தை விரும்புவோர் இவ் விதம் மின்னல்படையின் அவசி யத்தை நினைக்கவேண்டும். வேகமே ஜயத்தின் திரவு கோல். காலம் தான் எல்லாவற்றையும் கவர்ந்திருக்கிறது, ஹிட்லரின் சமீப யுத்தங்களுக்கு அடிப்படையில் காலத்தின் சரியான கணனம் தான் இருக்கிறது. ருஷ்யா தேசம் விஸ்தாரமான பரப்பை உடையது. நெபோலியன் அதைப் பிடிக்க பலமாதங்கள் பிடித்தன. ஆனால் ஹிட்லர் நாட்கள் கணக்கில் பிடிக்கப் பார்க்கிறர். ஜெர்மன் பத்திரிகைகளும் அவ்விதம் சொல்லத் தொடங்கிவிட்டன. ருஷ்யா 70 நாட்களில் சரணுகதி செய்யுமென்கி ருர்கள். இது தான் ஹிட்லரின் தந் திரத்தை வெளிக்காட்டுகிறது. ருஷ்யாவைப் பிடிக்கும் பைத்தியத் திற்கு இது தான் காரணம். ஹிட்லரும் 70 நாட்களுக்குள் ருஷ்யாவை முறி யடித்து, ஆகாயப்படையைத் தூள் படுத்தி, தான் எல்லா விதமான— யந்திரங்கள் மனிதர்களடங்கிய சைனியத்தை மேற்கே திருப்பி பிரிடனைப் பிடிக்க நினைக்கிருர். நாட்கள் கணக்கிலேயேதான் ருஷ்யாவின் தோல்வியையும், இந்தத் தீவின் முற்றுகையையும், கடைசி ஜயத்தை யும் வைத்திருக்கிருர். ஏனென்ருல் அமெரிக்கச் சாமான்களை பூராவாகச் சேகரித்து அட்லாண்டிக் வழியாக இத் தேசத்திற்கு சாமான்கள் அனுப்ப பல மாதங்கள் ஆகுமென்று அவர் நினைக்கிருர். [தற்சமயம் 30 நாட்களும் கழிந்து விட்டன—பத்திராதிபர்].

ஆனால் எவ்விதம் அவர் உத்தேசங் கள் முறிக்கப்படலாம். பிரிடனும் அமெரிக்காவும் சேர்ந்து ஒப்பந்தம் செய்தபடி பொதுச் சத்துருவுக்கு விரோதமாக ருஷ்யாவின் பக்கம் சேர்ந்து சீக்கிரத்தில் பூர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சரிதான் பிரிடன் சம்பந்தப்பட்ட வரையில் சில வாரங்களாக ஒரு ஏற்பாடு செய்திருக் கிருேம். இத்தீவின் தெற்குக்கரைப் பக்கங்களில் ஜனங்கள் இரவும் பகலும் காவல் காத்துக்கொண்டும், கவனித் துக்கொண்டுமிருக்கிருர்கள். ஆகாசம் அநுகூலமாக இருக்கிறது. எதிரி விமானங்களின் உருமல் சப்தங் கள் கேட்கப்படவில்லை; பிரிடிஷ் பட்டிணங்கள் பொட்டலாகுவதையும்

வீடுகள் தகர்க்கப்படுவதையும், வர்ணிக்க முடியாத துக்கங்களையும், கவலைகளையும் தெரிவிக்க இடமில்லை. அதற்குப் பதிலாக ஆத்திரத்தையும் ஆசையையும் வெடி விமானங்களின் சப்தத்தில் ஊகிக்கிறோம். நாஸித் துப்பாக்கி, விமானங்கள் இவைகளின் சாட்டையை அனுபவித்த டோவர் இப்பொழுது வெளியே யுத்த யாத்திரைக்குப் போகும் வீரர்களுக்கு கடைசி விடையளிப்பையும், திரும்பி வருபவர்களுக்கு முதல் நல்வரவையும் அளிக்கிறது. கடந்த வருஷத்தின் ஸெப்டம்பர் நவம்பர் மூட மாறி பாடம் படிக்கப்படுகிறது. இதைக் கண்களாலேயே பார்க்கக் பிரிடிஷ் மக்களுக்கு இது புத்துயிரைப் புகட்டுகிறது. பலமாகத்தாக்கப்பட்ட பிலிமௌத், கவண்டிரி, மார்ஸிஸயிட் லண்டன் பிரதேசங்களுக்கு ஆறுதலை அளிக்கிறது.

சென்ற 15 நாட்களாக, ஒவ்வொரு இரவும் பகலும் பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனிக்குள்ளும், ஜெர்மனியால் ஜயிக்கப்பட்ட ஐரோப்பாவிலும் சண்டையை பலமாகச் செய்கின்றன. எப்படி இந்த மாறுபட்ட அதிர்ஷ்டத்தை விளைவிக்க முடிந்தது ? ஒன்று கூட மறக்கக் கூடாத இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலில் நிச்சயமாக ருஷ்யர்களுக்கு நாம் வந்தனம் அளிக்கவேண்டும். அவர்கள் லுப்ட்வாப் (ஜெர்மன் விமானப்படை)யின் ஒரு பாகத்தைக் கிழக்கே இழுத்துக் கொண்டார்கள். ஆகவே நமக்கு ஜெர்மன் கேந்திரஸ்தானங்களை சுலபமாகவும் பலமாகவும் அடிக்க சந்தர்ப்பம் கொடுத்தார்கள். மேலும் மற்றொரு காரணமும் உண்டு. இப்பொழுது விமான தளங்களிலிருந்து கிளம்பும் விமானங்கள் பிரிடிஷ் ஜனங்களால் 2, 3 மாதங்களுக்குமுன் கட்டி முடிக்கப்பட்டவை. கடந்த வருஷம் முழுதுமே தங்கள் உயிர்க்கழுவில் இருக்கின்றனவென்று ஜனங்கள் அறிந்து புதிய தீர்மானத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இன்று அந்தக் கடுமையான வேலையின் பயனை அடைகிறோம். அப்படி வேலை செய்ய அவகாசம் இருந்திருக்காவிடில் ருஷ்யச் சண்டையின் பயனை நாம் அடைந்திருக்க முடியாது. அவ்விதமே இப்பொழுது செய்யும் முயற்சியும், யந்திரங்கள் சேகரிப்பதையும் பொருத்துத்தான் இனி 60, 70 நாட்களுக்குப்பிறகு வரும் வெற்றி இருக்கிறது. அதில் நாம் அஜாக்கிரதையாக இருந்தால் 2 மாதம் கிரமித்து ருஷ்யர்களுக்கு உதவவோ, நம்மைத்தான் காப்பாற்றிக்கொள்ளவோ முடியாது.

ருஷ்யச் சண்டை நமக்குத்தான் நடக்கிறது என்று மனப்பால் குடித்துக் கொண்டு நாம் சும்மா இல்லை. முன்னை விட அதிக முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. ஜெர்மானியர் ருஷ்யாவுடன் சண்டையிடுகிறார்கள் என்ற தகவல் கிட்டினவுடன் ஒரு பெரும் பரபரப்பு இங்கே பரவிற்று. சென்ற வருஷம் ஜெர்மனி பிரிடனை எதிர்த்தபடி இப்பொழுது நாம் ஜெர்மனியை அடிக்கத் தருணம் கிட்டியிருக்கிறது. மிஸ்டர் சர்ச்சில் ருஷ்யர்களுக்கு பிரிடனின் வரையறையில்லாத உதவியை, வியக்தமாயும், வற்புறுத்தியும், பிரகாசமான வாசகங்களிலும் வெளிப்படுத்தியவுடன் பிரிடனில் பரபரப்பு அதிகரித்தது. பழிக்குப்பழி வாங்க சமயம் வந்திருக்கிறது. பிரஸிடெண்டு ரூஸ்வெல்டும்

அம்மாதிரி பேசியதும் நம் சந்தோஷம் விருத்தியடைந்தது. கோபம், முடிவான எண்ணம் உள்ள மனிதர்கள் நிறைந்த இவ்வுலகம் நாஸிக் கூட்டத்தை பழி வாங்கக் கிளம்பியது போல் காணப்பட்டது. ஆகாயச் சண்டையில் கோபத்துடன் பிரிடன் முன்னேறி வருகிறது என்று அறிந்தவுடன் நாம் ஜயிக்கலாம் என்ற நம்பிக்கையும் மேல் கிளம்பிற்று. மிஸ்டர் சர்ச்சில் பிரபுவோ, ரூஸ்வெல்டோ, பிரிடிஷ் சைனியமோ ஒருக்ஷணத்தையும் வீணுக்கவில்லை. வேகமான எதிர்ப்புகள் உள்ள இந்தச் சண்டைகளில் முக்கியமான வேகம், எண்ணெய், இரும்பு, ரேடியம், ரத்னங்கள் இவைகளைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததென்று ஹிட்லரால் காண்பிவிக்கப்பட்ட வேகம், நம்முடைய நோக்கமாயும் ஆகிவிட்டது. அட்லாண்டிக்கின் அக்கரையில் (அமெரிக்காவிலும்) அவ்விதமே நினைக்கப்படுகிறது. ஒவ்வொரு க்ஷணமும் முக்கியமாகிவிட்டது. ஹிட்லரின் யுத்த தந்திரங்கள் இதைத்தான் அனுசரித்திருக்கிறது. கிழக்குப்போர் முனையிலிருந்து ஜெர்மன் விமானங்களைத் திரும்பச்செய்தாலும், பட்டிணங்களைப் பாழாக்கி, விமான தளங்களை நாசப்படுத்தி, இரண்டு பக்கங்களிலும் வெகு நாளாகச் சண்டைக்குப் பயந்த நாஸிகளை ஈடுபடும்படி செய்தால் ருஷ்யர்களை காப்பாற்றி நம்மையும் காப்பாற்றிக் கொண்டவர்களாவோம். பிரிடன் தேசத்தார்கள் இன்று இவ்விதம் சொல்லுகிருர்கள். "ஒவ்வொரு வெடி விமானத்தையும் உபயோகியுங்கள், ஒவ்வொரு ஆயுதத்தையும் கையிலேந்துங்கள், உலோகத்துண்டுகள் யாவற்றையும் உபயோகியுங்கள். நாம் ஈச்வரனிடத்திலிருந்து வேகம் (அருள்) பெற்றவர்களாகிருேம். இதை நிராகரித்தால் மற்ருென்று கிடைப்பதரிது. இது ஒரு அபூர்வமானது. இதே கடைசியாக இருந்திருக்கலாம். வேகம் தான் முக்கியமானது. நாஸிகள் கைவசமிருந்து நாம் முதலில் அடிப்பதைக் கைப்பற்றுவோம். இந்தத்தீவின் முற்றுகை விஷயமான ஹிட்லரின் யோசனையை பயன்படாமல் செய்யுங்கள். நீண்ட தொந்தரவளிக்கும் சண்டையிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்."

---

## ருஷ்யாவின் மர்மம்.

## ஜெர்மனி மீது பழிவாங்க சண்டையிடுகிறவர்களுக்கு நாம் உதவுகிருேம்.

ருஷ்யா மீது ஜெர்மனியால் திடீரென்று செய்யப்பட்ட எதிர்ப்பை அறிந்தவுடன், சர்ச்சில், ராஜ்ஜிய தந்திரத்தின் நைபுண்யத்தை வெளிப்படுத்தி, புரக்கணிக்கப் படவேண்டுமென்று சில இடையூறுகளைச் சொல்லி, ஹிட்லருடன் சண்டைபோடும் யாவருக்கும் உதவவேண்டுமென்று சொன்ஞர். இதுதான் கவர்ன்மெண்டாரின் தீர்மானமான முடிவு. இதே முடிவு பல ராஜ்ஜிய நிர்வாகிகளாலும் பன்முறை சொல்லப்பட்டது. நமக்குள் எவ்விதமான அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் சர்ச்சிலுடன் நாம் இவ்

விஷயத்தில் ஒத்திருக்கிறோம். இவரே சென்ற யுத்தத்தின் கடைசியில் போல்ஷிவிஸ்ட் கக்ஷிக்கு விரோதமாக நின்றவர்களில் தலைமைப்பட்டவர். அவ்வமயம் யுத்த மந்திரியாக இருந்தார். அப்பொழுது தாத்காலிகமாக ஏற்பட்டிருந்த ருஷ்ய கவர்ன்மெண்டு நம்முடன் சிநேகமாக இருந்தது. சண்டை துவக்கப்பட்டு, மூன்று முறை நாசமான சைனியத்தை மறுபடி புதுப்பித்து நம்முடன் இருந்து ருஷ்ய சைனியம் உதவிற்று. சமாதானம் செய்து கொள்ளுவதில் அதிக ஆசைப்பட்டு போல்ஷிவிக்ஸ் கக்ஷிக்கு இடம் கொடுத்தது. சிலர் அவமானமான பிரஸ்டு-லிட்வ்ஸ்க் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். மற்றும் சிலர் சண்டையை விடாமல் நடத்தினர். அவ்விதமான ருஷ்யர்களை நாம் ஏமாறச் செய்யக்கூடாது. சர்ச்சிலும் அப்பொழுது சொன்னதைத்தான் தற்சமயமும் சொல்லுகிறார். "ஜெர்மனிக்கு எதிரில் மார்தட்டுகிறவர்களுக்காக நாம் இருக்கிறோம்." ருஷ்ய ஜனங்கள், இங்கிலாந்தைப்போல உலகச் சத்துருவான ஹிட்லருடன் சண்டையிட தங்கள் நாட்டைக்காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள் என்று சேர்த்துச் சொன்னார். ஆம், சர்ச்சில் சொல்லுவது போல், ருஷ்ய ஜனங்கள் தங்கள் வீடுவாசல்களைக் காப்பாற்றுகிறார்கள்.

### பூர்வ சரித்திரம்.

சென்ற யுத்தத்தில் நிலைமை இம்மாதிரி இருந்தது. ருஷ்யாவின் தலைவர் த்ஸார்தான். ஆனால் பொம்மைபோல் இருப்பதைத் தவிர அவர் வேறொன்றும் செய்வதற்கில்லை. உண்மையில், பார்ப்பதற்கு அழகிய உடம்பு வாய்ந்தவரே தவிர மனோதிடம் இல்லை. சம்சாரப் பேய் பிடித்தவர். ருஷ்யா கெடுதலடைந்ததற்கு இதுவே பிரதம காரணம். எல்லா சமயமும் ருஷ்ய சைனியத்துடன் இருந்தேனுகையால் போர் முனையில் ருஷ்யர்களுக்கேற்பட்டவைகளை நான் அறிவேன். 1915 மேமீ 2-ம் தேதியன்று தற்சமயம் ருஷ்ய சைனியம் சண்டைபோடும் இடத்தில்தான் ஜெர்மன் மெக்கென்ஸன் ருஷ்யர்களைத் துளைத்துக்கொண்டு கெலிஷியாவிலிருந்து பின்ஸ்க் சதுப்பு நிலங்களுக்குச் சென்றது. ஒரு சிறு குன்றின் மேல் நான் உட்கார்ந்திருந்ததால் எதிரில் கார்ப்பேதியன் மலைத் தொடரும், $\frac{1}{4}$ மைல் தூரத்தில் கீழே நடக்கும் செய்கைகளும் தெரிந்தன. இரண்டு பக்கங்களிலும் 5 மைல் தூரம் வரையிலும் காணமுடிந்தது. அதற்கு எங்களால் எதிர்ச்செய்ய முடியாதபடி சத்துரு இடைவிடாது சுட்டான். ஒரு ருஷ்யவீரன் என்னைக்கடந்துசென்றான். "நீ பூமிக்குள் மறைந்த இடத்தில் இருந்து வந்தாயா" என்று கேட்டேன். 'பள்ளங்கள் எல்லாம் மூடப்பட்டன' என்று பதிலளித்தான். "சத்துருக்களால் அவையெல்லாம் கொளுத்தப்பட்டன, உமக்குத் தெரியுமா, அய்யா, வீரனின் மார்பு என்ற ஆயுதம் ஒன்றுதானிருக்கிறது. ருஷ்யர்களுக்கு வீரத்தில் குறைவு இல்லை. ஆனால் தனக்கென்று துப்பாக்கி இல்லாததால் சண்டை செய்ய முடியவில்லை." இது புகாராச் சொன்னதாக இல்லை. நான் அன்று சேர்ந்திருந்த ருஷ்ய சைனியம் 16,000-த்திலிருந்து 500-க்கும் அதில் ஒரு படை 4,000-த்திலிருந்து 41, (40 சிப்பாயிகள், ஒரு தளகர்த்தர்)க்கும் குறைந்தது. லார்டு கிச்சனர்க்கு ருஷ்ய சண்டை நிலயத்திலிருந்து

ரகஸ்யமாக நான் கொண்டுவந்த ருஷ்ய நஷ்டம், முதல் 10 மாதங்களுக்கு 38,00,000. சண்டை நஷ்டங்களைக் குறிக்கும் பெரிய ஜெர்மன் கணக்குப் புஸ்தகத்தில் ருஷ்யர்களின் நஷ்டம் உள்ள பக்கம் கிழிக்கப்பட்டது. 50-லக்ஷமோ, 80 லக்ஷமோ நமக்குத் தெரியாது. ருஷ்யர்களில் மறு அலைக்கு வழி கொடுக்க ருஷ்யர்களின் பிரேதக் குவியல்களை ஒதுக்க வேண்டியிருந்தது என்று எழுதியிருந்தது.

## முற்றுகையின் தோல்வி.

லுடன்டார்ப், ஹாப்ட்மான் அடிக்கடி தெரிவித்தபடி, இவையெப்படி இருந்தபோதிலும் ருஷ்யர்கள் பலமான பின் பந்தோபஸ்து முறைகளால், நஷ்டங்களை கவனியாது படிப்படியாகத்தான் பின் வாங்கினார்கள்; உதாரணமாக காகேஷியன் படை தினம் $1\frac{1}{2}$ மைல் விதம் வந்து அகண்டநடு சைனியத்தை ஜெர்மானியரால் சூழப்படாமல் தப்பிற்று. லுடன்டார்ப் சண்டையின் வரலாற்றை முடிக்கும் பொழுது, ருஷ்யாவில் விஸ்தாரமான இடங்கள் கடக்கப்பட்டனவென்றும் அதனால் ஒரு விதமான பிரயோஜனம் இல்லை என்றும்—ஏனென்றால் ராணுவ சாஸ்திரத்தின்படி வெற்றியாகுமே தவிர உள்ளபடி அவர் வெற்றி அடையவில்லை—முடித்திருக்கிறார்.

## ருஷ்யப் புரட்சிகள்.

ருஷ்யாவில் நடந்த புரட்சிகளுக்குச் சென்ற சண்டையில் அடைந்த நஷ்டங்கள்தான் காரணம். கார்ல் மார்க்ஸ் காரணமில்லை. அவரின் செல்வாக்கு புரட்சிக்குப் பிறகு தான் முன் வந்தது.

## ருஷ்யாவின் தற்கால நிலை.

சென்ற யுத்தத்தில் ருஷ்யர்கள் கடுமையான நிலைகளில் சண்டையிடநேர்ந்தது. இப்பொழுது அவர்களுக்கு அம்மாதிரியான அசௌகரியங்கள் இல்லை. ருஷ்யாவை 20 வருஷங்களாகக் காணுதவர்களும் கடைசியாகப் பார்த்தபடி பார்க்கிறவர்களும் ஒரு தப்பிதம் செய்யக்கூடும். இப்பொழுது இருக்கும் ருஷ்ய கவர்ன்மெண்டு, சென்ற யுத்தத்தில் உயிர் விடும் தருவாயிலிருந்த த்ஸாரின் ராஜாங்கம் ருஷ்யாவுக்கும் அடைய முடியாதபடி ஜனங்களின் பலத்தையும், தத்துவத்தையும் காண்பிக்கிறது. ஒவ்வொரு ருஷ்யனும் தன் தேசத்திற்காகச் சண்டை போடுகிறான். முன்னிருந்ததைவிட இப்பொழுது தேசத்தில் தன் பாகத்தையும், அதைக்காப்பாற்ற புத்துயிர் பூண்ட உணர்ச்சியையும் அறிகிறான். ஸ்டாலினின் ஐந்து வருஷ திட்டத்தின் முக்கிய பயன், ஆயுதங்களின் வருந்தத்தக்க முன்னிருந்த குறைவு ஏற்படாமல் செய்வதில் காணப்படுகிறது. நிச்சயமாக ஜெர்மனி கையாளும் அளவைக் காட்டிலும் ருஷ்யா எல்லா விதமான யந்திரங்களிலும், பரிஷ்காரப்படாமல் இருந்தபோதிலும் அதிகம் கொண்டு இருக்கிறது.

## டிராட்ஸ்கியும், ஸ்டாலினும்.

1928-ல் டிராட்ஸ்கியின் மேல் ஸ்டாலின் அடைந்த வெற்றிக்குப் பிறகு, உலகப்புரட்சி என்ற சாதிக்க முடியாத எண்ணங்களைக் காட்டிலும் சுதேச முன்னேற்றம், தங்கள் காபந்து முதலியவைகளில் ருஷ்யா அதிக கவனம் எடுத்துக் கொண்டது. ஸ்டாலின், டிராட்ஸ்கி தொந்தரவைக் குறித்து நாங்கள் அறிந்ததைவிட நீங்கள் நன்கு அறிவீர்கள். அதிலெல்லாம் நாம் தெரிந்துகொண்டது இதுதான்: மற்றெல்லா தேசங்களில் ராஜ விரோதத்தை விதைக்கவே

டிராட்ஸ்கி முயன்றார். ஆனால் ஸ்டாலின் ருஷ்ய ஸ்வதேச நன்மைக்காகவே, நிற்கிறார். அவரின் முக்கிய கொள்கை ஸோஷலிஸம், (சமரச உரிமை வாதம்). அந்தக் கொள்கைக்கு முக்கிய உதாரணமாகத்தாமே இருந்தார். முன்னிருந்த போல்ஷிவிக்ஸ்காரர்கள் துர்ஜனர்கள். பெருங்காலம் ஊருக்கு வெளியிலேயே வசிக்கும்படி செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு உலகப் புரட்சிதான் முக்கிய குறிப்பு. ஸ்டாலினும் அவரின் ஸகாக்களும் ருஷ்யாவுக்கு வெளியே சென்றவர்களே அல்ல. அப்படி இருக்கும் பொழுது அவர்களால் எப்படி புரட்சியில் ஈடுபடமுடியும். அவர்கள் லக்ஷியமும் வேறு. ஐந்து வருஷ திட்டம் என்ற முறையால் புத்துயிர் வாய்ந்த ருஷ்யர்களை தேசம் முழுதும் பரவின அனுபவங்களால் தைரியமும் வலுவும் பெற்றவர்களாயும் ராஜ்ஜிய அனுபவங்களில் தேர்ந்தவர்களாயும் செய்தார்கள். இவ்விதம் செய்தது பல யௌவன மனிதர்களுக்கு முப்பது வயதுக்குள் வேறு தேசங்களில் அடைய முடியாதபடி பெரிய உத்தியோகங்கள் அடைய எல்லையில்லாத இடம் கிடைத்தது. ஹிட்லரும் அவ்விதம் தான் முன்னுக்கு வந்தவர் (?) இது பிரான்ஸில் 1793-ம் வருஷத்தில் செய்ததிற்குச் சமமாக ஆகிறது. அவ் வருஷத்தில் தளகர்த்தர்கள் பலர் சிறை புகுந்தனர் என்பது உண்மை. ஆனால் மார்ஷல் நெ என்பவர் ஒரே ஒரு சண்டையில் சிறு சேனை வீரன் ஸ்தானத்திலிருந்து பெரிய படைத்தலைமை பதவியை அடைந்து பிறகு சாம்ராஜ்ஜியத்திற்கும் தலைமை வகித்தார். நெபோலியன் சொல்லியபடி அது முதல் ஒவ்வொரு சாதாரண சிப்பாயும் தளகர்த்தர் அடையாளங்களை தன் தோற்பையில் அணியத் துணிந்து விட்டான். இதுதான் முன்னிருந்த ருஷ்ய சைனியத்திற்கும் தற்போதய சைனியத்திற்கும் உள்ள முக்கிய வித்தியாசம். அதற்கு மேலும் ஐந்து வருஷ திட்டத்தின் முறையில் தயாரான இஞ்ஜினியர்கள் ருஷ்யாவில் இருக்கிறார்கள். த்ஸார் காலத்திலோவெனில் பல கீழ் உத்தியோகஸ்தரை மேல் வேலைகளில் ஒப்படைப்பது நிச்சயமாக முடியாமல் இருந்தது. ஏனெனில் அவர்கள் வெறும் தற்குறிகள். இப்பொழுதோ படிப்பு எங்கும் வியாபித்து விட்டது. பழைய ருஷ்ய சைனியத்தில் இருந்த பல நற்குணங்கள் புது சைனியத்திலும் காணப்படுகின்றன. அவர்களும் ருஷ்யாவுக்காகப் போரிடுகிறார்கள். நிச்சயமாக சம உரிமை (கம்யூனிஸம்)க்காகவல்ல. அங்கிருந்து கிடைக்கும் யுத்த அறிக்கைகளிலிருந்து நாம் இவ்விதம் கூற முடிகிறது. பன்முறை ருஷ்யாவுக்குச் சென்றதிலிருந்தும் இந்த மாறுதல்கள் தெரியும். தேசம் தான் மேலானது. வேறு விதமான கொள்கைகள் கவனிக்கப்படவில்லை.

## கம்யூனிஸம் அல்லது சமத்துவம்.

ஆனால் ருஷ்யாவில் இக்கக்ஷி இல்லை என்று சொல்லவில்லை. இதை அவர்கள் அவலம்பிக்கத் தீர்மானித்தால் அது ருஷ்யர்களின் சொந்த விஷயம். உண்மையில் உத்யோகத்திலுள்ளவர்களின் முயற்சியால் தான் இக்கக்ஷி ஒரு முடிவுக்கு வரவில்லை. பரீக்ஷை நிலையில் இருக்கிறது. இதன் சில தத்துவங்கள் யாவருக்கும் புரிந்ததாகவும் இல்லை. சன்யாசிகளே இதை கைப்பற்றலாம். ஒவ்வொரு ருஷ்யனுக்கும் சமரச நிலையில் பற்றுதல்

உண்டு. ஆகவே காரியங்களைப் பிரருக்குச் செய்து, தனக்கும் செய்து கொள்ளுவது விசேஷ திருப்தியைக் கொடுக்கிறது. அப்படிச் செய்வது தனிப்பட்ட பணக்காரர்களுக்கு மாத்தரம் இல்லாமல் தேசத்தார் முழுதுக்கும் உபயோகமாகிறது.

**மதமும், சமத்துவமும்.**

மத துவேஷத்திற்கும் சம நிலைக்கும் சம்பந்தமே இல்லை. ருஷ்யர்களின் இயற்கைக்கு இது மாறுபட்டது. அடிக்கடி ஸோவியத் உத்தியோகஸ்தர்களைக்கண்டு பேசியிருக்கிறேன் :—"ஏசுநாதர் கீழ் வகுப்பினரைச் சேர்ந்தவர்தானே?"

மதமென்பது மாறுபட்டிருக்கிறது. எல்லா மதங்களின் சரித்திரங்களிலும் அசந்தர்பங்கள் நிரம்பியிருக்கின்றன. அவைகளை ஏன் திருத்தக்கூடாது என்ற பதில் கூறுகிறார்கள். ஒரு புது முறையில் கிருஸ்துவ மதத்தையே கைக்கொண்டு அதன் பேருதவியை அடைந்திருக்கலாம். கடவுளை மறுத்திருக்க வேண்டியதில்லை. கார்ல் மார்ஸ் சுமார் 100 வருஷங்களுக்கு முன், பாதிரிமாரை பெரிய மனுஷர்கள் நோக்கப்படி ஆடுகிறவர்களென்றும் மதம் பணக்காரருக்காகத்தானிருக்கிறதென்றும் சொன்னார். இப்படிச் சொல்லுவது வீண் பிடிவாதம்தான். இவ்விதமேதான் ஏசுநாதரையும் பணக்காரரைச் சார்ந்தவர் என்றார். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம் :—பொதுவான மனுஷ்ய சுவபாவம்போல் ருஷ்யர்களின் மனது நாஸ்திகமாகச் செய்ய முடியாது. மறை முகமான கடவுளைப் பற்றிய எண்ணம் சுவபாவத்திலேயே இருக்கிறது. அந்த எண்ணம் தான் மற்றவையைக்காட்டிலும் பெரியது என்றும் நினைக்கிறேன். ஆகையால் சமத்துவ கக்ஷியாரும் ஆஸ்திகத்தில் சேருகிறார்கள். அனீச்வர வாதிக் கூட்டத்தின் தலைவர்கள், சிஷ்யர்களின் அருசியைப்பற்றி குறைகூறுகிறார்கள். அச்சமயம் மதத்தை எதிர்த்தவரும் வகுப்பு இலாகா மந்திரியுமானவர் பின்வருமாறு அழகாகக் கூறினார். "மதமென்பது ஒரு ஆணிக்குச் சமானம். ஆணியை பலமாக அடிக்க அடிக்க முறியாமல் ஆழமாகப்போவது போல் மதத்தை துவேஷிக்க துவேஷிக்க பொது ஜனங்களின் நம்பிக்கை தான் பலப்படுகிறது."

**தேசத்துக்குறிய உத்ஸாகம். மஹிமை வாய்ந்த தேசத்தின் தற்காப்பு**

போர் முனையிலிருந்து இதுவரை கிடைத்த அறிக்கைகளிலிருந்து ருஷ்யர்கள் சென்ற யுத்தத்தைவிட சூரத்தனமாயும் உத்ஸாகமாயும் சண்டை செய்கிறார்கள் என்று கிடைத்திருக்கிறது. எல்லா விஷயங்களிலும் தேசக்ஷேமத்தைத்தான் முதன்மையாகக் கருதிகிறார்கள். இந்த யுத்தத்திலும் தேசாபிமானம் வளர்ந்திருக்கிறது. ஐந்து வருஷ திட்டப்படி சாமான்கள் உற்பத்தியிலேயே எவ்விதம் ருஷ்யர் ஈடுபட்டிருந்தது என்பதை நாம் நன்கறிவோம். தேசிய இயக்கக் கூட்டங்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் நடைபெறுகிறது. ஜனங்களும் வேலைகளை இரட்டித்துச் செய்வோமென்று சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டும் பூராவாகத் தேசியத் தன்மையை போதிக்கும் வாசகங்களையே உபயோகிக்கும் முறைக்கு வந்துவிட்டது. த்ஸார்கள் அரசாங்கத்தில் பல நூற்றாண்டுகளில் அடைந்த விஷயம் திரும்பி ஞாபகப்படுத்தப்படுகின்றது. மேலும்

ஜெர்மன் சைனியத்தை தொலைத்த அலெக்ஸாண்டர் நெவ்ஸ்கியின் வெற்றிகரமான ஐஸ் என்ற யுத்தத்தை சினிமா படம் மூலம் பாராட்டுகிறார்கள். நெபோலியனைத் தோற்கடித்த முதல் அலெக்ஸாண்டரின் வார்த்தைகளை எதிரொலிக்கும்படி மாலடோவ் ஞாபகப்படுத்துகிறார். எங்கு பார்த்தாலும் "தயவற்ற சத்துருவினிடமிருந்து பூஜ்யமான ஸோவியத் நாட்டை காப்பாற்றுங்கள்" என்று கூறப்படுகிறது.

அதிக ஆவேசத்துடனும் சந்தோஷத்துடனும் ஜெர்மானியரைத்தான் எதிர்ப்பார்கள். ஜெர்மானியர் துஷ்டர்களென்றும், கண் தெரியாமல் பொட்ட அதிகாரம் செலுத்துகிறவர்களென்றும் தெரிய வரும். அவர்களின் செய்கையை பொருத்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே சமயம் வந்தபொழுது நேருக்கு நேர் அவர்களை எதிர்ப்பதைத் தவிர வேறொன்றும் சந்தோஷமளிக்காது.

---

## உயரப் பறக்கும் பந்தயம்.
## வெகு உயரப் பறக்கும் பிரிடிஷ் புதிய 'பைடர்கள்.'
## ஆகாய மண்டலத்தில் படையணிவகுக்கும் திறமை.
## பெரிய 'பாம்பர்' விமானத்தின் சாதகம்.
## விமானங்களை ஒருவிதப்படுத்திக் கட்டுவதிலிருக்கும் கஷ்டங்கள்.

(ஆலிவர் ஸ்டுவர்ட் சமீபத்தில் பி. பி. ஸி. யில் பேசியது.)

விமான உற்பத்தி இலாகா மந்திரி, கர்னல் மூர் பிராப்ஸன் ஒரு சமயம் 'காமன்ஸ்' சபையில் பேசியபொழுது, அதிக உயரம் விமானம் பறப்பதிலுள்ள சாதகத்தைப் பற்றியும், அத்தகைய விமானம் ஒன்றை உற்பத்தி செய்ய பிடிக்கும் நேரத்தைப் பற்றியும் குறித்துச் சொன்னார். அவை இரண்டும் எனக்கு மிகவும் பிடித்த விஷயங்கள். அவர் சொன்னதில் முதலாவதாக நமக்கு 40,000 அடி உயரத்தில் பறக்கக்கூடிய புதிய போர் விமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவென்றும், அதற்கடுத்தபடியாக 'பைடரின்' யந்திரம் மட்டில் செய்து முடிக்க 75,000 மனுஷ-மணிகள் நேரம் பிடிக்கிறதென்றும் கூறினார்.

இதுவரை வெளிவந்த ஸர்க்கார் அறிக்கைகளில் 35,000 அடி உயரம்வரை ஆகாயச் சண்டை நடந்தது குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த உயரத்திற்கு மேல் சண்டை நடந்ததாகத் தெரியவில்லை. 40,000 அடி உயரம், அதாவது இன்னும் 5,000 அடி உயரப் பறக்க முடியுமானால், பிரிடிஷ் விமானப்படைக்கு பெரிய சாதகம் ஏற்படும். 40,000 அடி என்றால் கிட்டத்தட்ட $7\frac{1}{2}$ மைலுக்கு மேலிருக்கும்.

யுத்தத்திற்குப் போகும் காலத்தில் விமானங்கள் மேலிருந்து ஒன்றன் கீழ் ஒன்றாக அணிவகுக்கப்படுகின்றன. இம் முழு அணிகளுடைய பலமும் மேல்

அணியின் பலத்தைப் பொறுத்து நிற்கும். மூன்று வரிசையில் அணிவகுத்திருப்பதாக நாம் எண்ணிக்கொள்வோம். மேலணி எதிரி கையில் அகப்பட்டுக்கொண்டால், கீழ் உள்ள இதர அணிகளுக்கு ஆபத்து அதிகமாகும். எல்லாவற்றிக்கும் அடியிலுள்ள அணியில்தான் 'பாம்பர்' விமானங்கள் செல்லும்.

## ஆகாய எதிர்ப்புகள்.

முதல் வரிசை விமானங்கள், எதிரி விமானப்படை அணுகமுடியாதபடி அதிக உயரத்திலிருந்தால் அங்கிருந்துகொண்டு அடுத்த அணியில் இருக்கும் விமானப்படையைத் தாக்கப்படாமல் பாதுகாக்க முடியும். ஆகாயத்தில் கீழிருந்து மேல் நோக்கியும் யுத்தம் செய்யக்கூடும். இம்மாதிரி தாக்குதல்தான் அடிக்கடி முயற்சிக்கப்படுகிறது. ஆனால் அநேகமாய் மேலிருந்து கீழ் நோக்கித்தான் தாக்கப்படுகிறது. ஆனால் 'பாம்பர்' விமானங்களுக்கு உயரத் துணை விமானங்கள் எப்பொழுதும் கூடப்பறந்து வந்தால், அவைகள் நன்றாய் பாதுகாக்கப்படும்.

எதிரி விமானங்கள், 'பாம்பர்' விமானங்கள் பேரில் உயரத்திலிருந்து பாய்ந்தால், அவற்றைப் பாதுகாக்க மேலேயிருந்து துணை விமானங்கள் எதிரி விமானங்களை நோக்கிப்பாயும். அப்பொழுது எதிரி விமானங்கள் இவைகளைத் தாக்க திரும்பத்தான்வேண்டும். ஆகையால் எதிரி தேசம் பூராவும் இவ்விதம் மூன்று அடுக்குப் பெரிய விமானப்படை பரவிச்சென்று எதிரி விமானங்களும் அவைகளுடன் சண்டையிட்டால், அப்பொழுது அணிவகுப்புகளிலிருந்து மேலுள்ள விமானங்கள் கீழே இறங்கும். விரோதி இம்மாதிரி தன்னுடைய விமானங்களைக் கொண்டு, மேல் வகுப்பு விமானங்களோடு சண்டையிடச்செய்து, அப்படி சண்டை நடக்கும்பொழுதே வேறு விமானங்களை அனுப்பி கீழிருக்கும் பாம்பர்களை உடைக்கப் பார்ப்பான்.

ஆகையால் ஆகாயம் நிர்மலமாய் இருக்கும் சமயத்தில் நாம் வெகுதூரம் சென்று எதிரி தேசத்தைத் தாக்கும்பொழுது, எதிரிகள் அணுகாதபடி வெகு உயரம் பறக்கும் "பைடர்களை" துணையாகக் கொண்டுபோவது நலம். இது காரணத்தினால்தான் சமீப காலத்தில் ஆகாய விமானங்கள் உயரப் பறக்கும் சக்தியை விருத்தி செய்வதற்கு ஆழ்ந்த யோசனையும், பிரயாசையும் நாம் முக்கியமாக எடுத்துக்கொண்டது.

## "பிரிடிஷ் ஸ்ட்ராடோஸ்பியர் பைடர்கள்"

அல்லது.

## ஆகாய மண்டலம்வரை செல்லும் யுத்த விமானங்கள்.

பூரண ராணுவ முஸ்தீப்புடன் 40,000 அடி உயரம் போகக்கூடிய ஆகாயப் படைகள் உண்டென்று முதல் முதலில் தெரிவித்தது விமான உற்பத்தி இலாகா மந்திரி. இவ்விதமாக பிரிடனில் கற்பனை செய்து புதிய விமானங்கள் கட்டப்பட்டிருக்கிறதாக நான் ஊகிக்கிறேன்.

35,000 அடி முதல் 38,000 அடி வரை பறக்கக்கூடியதாகச் சொல்லப்படும் ஒரு ஆள் ஓட்டிச்செல்லும் புதிய ஜெர்மன் 'மெஸர்ஷிமிட்' (Messerchmitt) 109 F, விமானம், அதிக உயரத்தில் உபயோகப்படுத்த வேண்டுமென்று செய்யப்பட்டிருந்தாலும், புதிய பிரிடிஷ் விமானப்படையிலுள்ள விமானங்கள் செல்லக்கூடிய உயரத்தைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. இப்படிச் சொல்வது அனுபவத்தில் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில், புதிய 'பிரிடிஷ் ஸ்ட்ராடோஸ்பியர் பைடர்கள்' எதிரி விமானங்களைக் காட்டிலும் 2,000 அடி உயரம் செல்லக்கூடியதாக இருப்பதால், பிரிடிஷ் விமானப்படைக்கு சாதகம் இருக்கிறது.

இது ஒரு பெரிய சாதகமாகாது. இருந்தபோதிலும் விமானப் போரில் உயரம் பறப்பது தான் முக்கியமான அம்சம். அதனால் இதை சாதகமென்றே சொல்லவேண்டும். அதிக உயரம் செல்லக்கூடிய பிரிடிஷ் 'பைடர்'களைப்பற்றி விவரம் தெரியவில்லை என்றாலும், அவை புது தினுசானவையல்ல. பழைய விமானங்களின் யந்திர அமைப்பை மாற்றி நூதன விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

38,000 அடி உயரத்திலிருந்துகொண்டு போர் புரிவதில், விமான மாலுமிகளுக்கு மிகவும் சிரமமாயிருக்கும். ஏனென்றால் அவர்கள் அடைபட்ட அரைகளில்லாமல், பிராணவாயு உற்பத்தி செய்யும் கருவியின் உதவியைக்கொண்டு சமாளிக்கிறார்கள். ஜெர்மன் விமானங்களைவிட பிரிடிஷ் விமானங்கள் உயரப் பறக்குமேயானால், ஜெர்மனியைத் தாக்கச்செல்லும் பிரிடிஷ் 'பாம்பர்' என்னும் வெடிவிமானங்களுக்குப் பலமான பாதுகாப்பு அளிக்கலாம்.

## பெரிய 'பாம்பர்' என்னும் வெடிவிமானங்கள் கட்டுவதைப்பற்றிய விஷயம்.

பெரிய 'பாம்பர்' விமானம் கட்ட 75,000 மனுஷ—மணிகள் நேரம் பிடிக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது வேலைக்காரர்கள் எண்ணிக்கையோடு அவர்கள் வேலைசெய்யும் நேரத்தைப் பெருக்கினால் இந்தத் தொகை கிடைக்கும். இது யந்திரம் செய்வதற்காக ஏற்பட்ட எண்ணிக்கை. விமானத்தின் மற்ற பாகங்களைக் கட்டுவதற்கு மேலும் வேலைசெய்யவேண்டும். இது 1914—1918-ல் விமானம் கட்டுவதற்குப் பிடித்த வேலையைக்காட்டிலும் இப்பொழுது அதிக காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காரணத்தினால்தான் பெரிய பாம்பர்களைச்செய்ய அநேகர் ஆக்ஷேபிக்கின்றனர். அதனால்தான் பெரிய "பாம்பர்" விமானங்கள் ஸ்வல்பம் கட்டுவதைக்காட்டிலும் அநேகம் சிறிய விமானங்கள் செய்வதே மேல் என்று சிலரின் அபிப்பிராயம்.

ஆனால் விமானம் கட்டுவதைப்பற்றித் தனித்தனியே யோஜிக்கவேண்டும். யந்திரம் செய்வதில் காலதாமதம் எவ்வளவு பிடிக்கிறதென்பது முக்கியமில்லை, குறிப்பிட்ட மணிக்குள், குறிப்பிட்ட நிறையுள்ள வெடிகுண்டுகளை, குறிப்பிட்ட லக்ஷியங்களில் வீசிவிட்டு திரும்புவதில் எவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது என்பதைப்பற்றித்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அப்படிப் பார்த்தால்

பெரிய 'பாம்பர்கள்' கட்டுவதில் பார்வைக்குத் தோன்றுவதுபோலல்லாமல், மொத்தத்தில் சிக்கனமென்றே தெரியும்.

மூன்று சிறிய விமானங்கள் ஏற்றிச்செல்லும் வெடிகுண்டுகளை ஒரே விமானம் கொண்டுபோகக்கூடும். ஆகையால் இராக்காலங்களில் படையெடுப்புக்கு அனுப்பப்படும் விமானங்கள் மூன்றுக்குப்பதிலாக ஒன்று அனுப்பித்தால் போதுமானது. இந்த விமானங்களை ஓட்டுவதற்கும் பயிற்சியடைந்த விமானிகள் அதிகம் வேண்டியதில்லை. ஒன்றுக்குப் பாதிகூடத் தேவையில்லை.

## ஒரேவித விமானங்கள் கட்டுவது.

இந்தக் காரணங்களை முன்னிட்டு உற்பத்திசாலைகளில் அதிகநேரம் செலவழித்தாவது மிகப் பெரிய 'பாம்பர்' விமானங்கள் செய்வதுதான் இலாக்கியமென்று எல்லோரும் வாதிக்கிறார்கள். ஆனால் ஆகாயவிமான உத்தியோகஸ்தர்களில் அநேகர்களின் அபிப்பிராயப்படி எனக்கும் இது சம்மதமில்லை. சிறிய விமானம் செய்வதை நிறுத்தி பெரிய விமானம் மட்டில் செய்வதென்பது முடியாத காரியம். பெரிய 'பாம்பர்' களுக்கு மேகங்களினாலோ இருட்டினாலோ, அல்லது 'பைடர்' விமானங்களினாலோ பாதுகாக்கவேண்டும்.

பகல் வேளைகளில் வெகுதூரம் சென்று எதிர்க்கும்பொழுது 'பைடர்கள்' துணையின்றி 'பாம்பர்' விமானங்கள் போகநேரிடுகிறது. இச்சமயங்களில் துரிதமாய்ச் செல்லும் 'பாம்பர்' விமானங்கள் உபயோகப்படும். பிரிடிஷ் விமானப்படை சமீபத்தில் நடத்திவரும் பெரிய தாக்குதல்களில் இரவிலும் பகலிலும், அதிக கனமுள்ள பெரிய 'பாம்பர்' விமானங்கள் உபயோகப்படுத்தப் பட்டன. ஆனால் 'பௌன்கம்' என்ற ஜெர்மன் விமானத்தைப்போலுள்ள சிறிய 'பாம்பர்' விமானங்கள் முக்கியமான வேலைகளைச் செய்திருக்கின்றன.

ஆகையால் ஒரேவிதமான விமானங்கள் கட்டுவதென்பது சரியல்ல. ஒரே அச்சுக்கு நம்முடைய பெரிய விமானங்களைச் செய்தால் அதிலிருந்து சிக்கனப் படுத்தலாம். ஆனால் அவை சாத்தியமில்லாத காரியம்.

தொழிலாளிகள் ஒரேமாதிரி விமானங்கள் கட்ட நோக்கம் கொண்டவர்கள். ஆனால் விமானிகளும், விமானப் பிரயாணிகளும் அதை மாற்றிக் கொண்டேயிருப் பார்கள்.

---

## 25 நாட்களில் 2,000 டன் எடையுள்ள குண்டுகள் வீசப்பட்டன.

## பிரிடிஷ் படை ரூர் பிரதேசத்தை தாம், மன்ஸ்டரில் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து நாம் அறிவது.

(மான்சஸ்டர் கார்டியன்—ஜூலை 17.)

ஜூன் 16-ம் தேதிக்கும் ஜூலை 10-ம் தேதிக்கும் இறுதியில் உள்ள 25 நாட்களில் ஜெர்மனியின் உயிர் நிலையான ரூர் ஜில்லாவில் பிரிடிஷ் பாம்பர்கள் சுமார் 2,000 டன் எடைக்கு மேலாகவே வெடிகுண்டுகளை வீசின. அதே காலத்தில் ப்ரெமன், கோலோன் என்ற இடங்களிலும் குண்டுகள் வீசப்பட்டன.

வரவர ஜெர்மனிமேல் எதிர்ப்பு கடுமையாக்கப்படும் என்று பிரதம மந்திரி சொன்னபடி செய்கையிலும் காட்டப்படுகிறது என்று தெரிய வருகிறது.

உலோகத்தொழிற்சாலைகள் சரியாக வேலை செய்யாததால், ஜெர்மனி மிகவும் பாதிக்கப்பட்டுவருகிறது. முக்கியமாக மன்ஸ்டரில் ரயில் முதலிய போக்கு வரத்து சாதனங்களுக்கு கெடுதி அதிகமாயிற்று. ஜூன் 16, 17 இரவில் மாத்திரம் ஐரோப்பாவிலேயே பெரிய உள்நாட்டுத் துறைமுகமும், ரயில் சாமான் செய்யப்படும் இடமான் டூயீஸ்பர்க்கும், தீஸியனில் இருக்கும் எஃகு வேலைச்சாலையும் நேராக பலதடவைத் தாக்கப்பட்டன. சில இடங்களில் எண்ணெய்க் கிணறுகள் கொளுத்தப்பட்டன. ஆகையால் தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்காமல் திரிகிறார்களாம்.

ஜெர்மனியில் மருந்து சாமான்கள், எண்ணெய் உற்பத்திசாலை, ரப்பர், வெடி உற்பத்தி சாலைகள் உள்ள கோலோனில் இருக்கும் ரயில்வேக் கட்டடங்களும் பாதைகளும் நாசமாக்கப்பட்டதினால் ரயில் வண்டிகளை ஒழுங்குப்படுத்த இன்னும் சில காலத்திற்கு முடியாது. ரைன் நதியின் கிழக்குக்கரையிலுள்ள போக்குவரத்துக்கு உதவும் கால்வாய்களை சில வாரங்களுக்கு உபயோகிக்க முடியாது.

ஜெர்மனி ஆக்கிரமித்த பிரான்ஸிலும், லில்லி என்னும் இடத்திற்கு உதவும் மின்சார உற்பத்தி சாலைகளும் பழுதாக்கப்பட்டுவிட்டன.

ஹெலிகோலந்து, ப்ரெமன் என்னும் பட்டிணங்களில் பகல் வேளைகளிலேயே பிரிடிஷ் வெடி விமானங்கள் வேறு துணையில்லாமலே வெற்றி அடைந்து வருகின்றன. முக்கியமாக, தைரியமாயும், பலமாயும் ப்ரெமன் பேரில் போக்கு வரவு அதிகமான சமயத்தில் தாக்கின.

மன்ஸ்டர் மீது முதலில் குண்டுகள் வீசியவுடன், பிரிடிஷ் வேவு பார்க்கும் விமானங்கள் அங்கே இருக்கும் ராணுவ நிலயங்களை புகைப் படம் பிடித்தன. அதில் ராணுவ நிலயங்கள் இருப்பது ருஜுவாகிவிட்டது. ஜெர்மானியர் ஜனங்களுக்குக் கெடுதி ஏற்பட்டது என்றும் சாராயக்கிடங்கு நிறைந்த புண்ணிய க்ஷேத்திரம் என்றும் சொன்னார்கள். அதில் உண்மையில் பொது மக்களே இல்லை. பொருளாதார யுத்த இலாகா மந்திரி சமீபத்தில் ஒரு படப் புஸ்தகத்தை காண்பித்தார். அது பிரிடிஷ் விமானங்கள். ஜெர்மனி விமான நிலயங்களுக்கு விளைவித்திருக்கும் நஷ்டத்தைத் தெரியப்படுத்துகிறது. டார்ட்மண்டு-எம்ஸ்-கால்வாய்யைச் சுற்றியுள்ள விமான நிலயக் கட்டடங்களும், ராணுவ நிலயங்களும் பெரிய ரயில்வே ஜங்ஷனும் தாக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே இடத்தில் தான் அமைக்கப்பட்டவை.

அந்த மந்திரி, "அப்படத்தின் மூலம் ஜனங்கள் வசிக்கும் இடத்திற்குச் சேதமில்லை" என்றும், ராணுவ நிலயங்களை குறி தவராமல் பிரிடிஷ் விமானங்கள் தாக்குகின்றன என்றும் சொன்னார்.

# லிபியாவில் அச்சுநாடுகளின் நிலை.

(டைம்ஸ் பத்திரிகையின் விசேஷ நிருபர் கெய்ரோவிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி—ஜூலை 10.)

ஜெர்மன் இதாலியருக்குச் சொந்தமான சாமான் கப்பல்களை அடிக்கடி பிரிடிஷ் நீர்மூழ்கிகளும், நாசகாரிகளும், இன்னும் கப்பற்படையும் சேர்ந்து லிபியாவுக்கு அருகில் தாக்கிவருவதாலும், லிபியா துறைமுகத்தையும், விமான தளங்களையும் பிரிடிஷ் ஆகாயப்படை, சரியானபடி தாக்கிவருவதாலும், விரோதிகளின் நிலைமை மிகவும் ஆபத்தானதாகவே முடிந்துவிட்டது. இப்பொழுது அச்சுநாடுகளுக்கு மத்தியதரைக்கடலில் நிச்சயமாகக் கப்பல்களின் உதவி குறைந்துவிட்டது. அதனால் கனமான கவசமணிந்த மோட்டார் வண்டிகளையும் யந்திரங்களையும், மற்ற பெரிய சாமான்களையும் ஏற்றிச்செல்ல முடியவில்லை. ஆகையால் லிபியாவில் இருக்கும் சைனியத்திற்கு யந்திர மோட்டார்களும், டாங்கிகளும் உதவிக்கு அனுப்புவது சாத்தியமில்லாமலிருக்கிறது. மேலும் ட்ரிபோலி, பெங்காஸி முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானங்களின் தாக்குதல்களால் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடங்கள் அதிகம் சேதப்பட்டிருப்பதால் சாமான்கள் அனுப்புவது சிரமப்படும். சென்ற மூன்று வாரங்களில் பெங்காஸி துறைமுகத்தில் மாத்திரம் ஒவ்வொரு இரவிலும் 10 டன் எடையுள்ள வெடிகள் போடப்பட்டன. அதனால்தான் பெரிய கப்பல்கள் கரையோரமாகக் கொண்டுவர முடியாது. தூரத்திலிருந்து சிறு கப்பல்கள் மூலம்தான் சாமான்கள் வரமுடியும். இந்தக் கஷ்டத்தால் சிறு துறைமுகங்களான டெர்ணு, அப்போலினியா மூலம் அவைகள் கொண்டுவரப்படுகின்றன. ஆகையால் பிரிடிஷார் தாங்களாக முதலில் சண்டை தொடுக்கும் முறையை வெகுநாளாக கையாண்டுவருவதால்தான் ஜெர்மானியருக்கு இந்த வியாகூலமான நிலை வந்தது.

இக்காரணத்தால் மூன்றுமாதங்களுக்கு முன்பு ஒரு சிறிய லக்ஷியமாக கருதப்பட்ட டொப்ருக்கை எதிர்க்க இப்பொழுது துணியவேயில்லை. ஏனென்றால் முன்போல் சாமன்களுக்கும் மனிதர்களுக்கும் சேதம் விளையுமோவென்று பயப்படுகிறார்கள். ஆபிரிக்காவில் உள்ள ஜெர்மன்படைக்கு பாலைவனச் சண்டையில் பழக்கமில்லை என்று நன்கு தெரிகிறது; ஒருக்கால் உஷ்ணப் பிரதேசத்திற்கு வந்து இருக்கும் இடத்தில் இருப்பதே வீரச்செயல் என்று நினைக்கலாம். அத்துடன் இல்லாமல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தாவுவதால் வழிதடுமாட்டம் பசி தாகம் முதலியன ஏற்படுமென்றும் பயப்படுகிறார்கள்.

## வெடிகுண்டுகள்! முன்னைவிட பெரியவை. முன்னைவிட உறுதியானவை. விமானப் போரில் ஜயிக்கப் பேட்டி.

(யார்க்ஷயர் போஸ்டின் விமானக் கடற்படை நிருபர் எழுதுவது.)

பிரதம மந்திரி, ஜெர்மனியை ஆகாய மார்க்கமாய்த் தாக்க நாம் பிரிடிஷ் படையை இன்னும் விருத்திசெய்யவேண்டுமென்றும், இனிவரும் சண்டைகளில் முடிவான வெற்றியடைய மார்க்கத்தையும் வற்புறுத்தினர். பிரிடனைப்போல எதிரியின் படையில் யந்திரங்களிலும் ஏறக்குறைய சமமானதால் அவர்களை ஜயிக்க கனமான குண்டுகளை உபயோகப்படுத்தவேண்டும். அந்த சமயத்தில் பல லேசான குண்டுகளைவிட சில கனமான குண்டுகளைப் பிரயோகிப்பதுதான் நல்லது. அவ்விஷயத்தில் பிரிடிஷ் விமானப்படை சமீபத்தில் அதிகம் முன்னடைந்து இருக்கிறது. புது குண்டுகள் செய்யும் கணக்குப் பிரகாரம் பழய குண்டுகளை நாம் பிரயோகித்து வருவதால் தடையின்றி எந்த சமயமும் நிர்வகிக்கமுடிகிறது.

பிரிடனை, ஜெர்மன் விமானங்கள் தாக்குவதைவிட ஜெர்மனியை பிரிடிஷ் விமானங்கள் தாக்குவது அதிக கஷ்டமானது. ஏனென்றல் ஜெர்மன் விமானங்களைவிட, பிரிடிஷ் விமானங்கள் அதிக தூரம் செல்லவேண்டியிருக்கிறது. தூரம் அதிகம் போகப்போக, எண்ணெய் டின்கள் அதிகம் தேவை. அதனுல் அதிக நிறையுள்ள வெடிகுண்டுகளைக் கொண்டுபோக இயலாது. ஆனுல் பிரிடிஷ் விமானப்படையில் பலமான வெடிகுண்டுகளைத் தாங்கிச்செல்லும் விமானங்கள் ஜெர்மன் யந்திரங்களைவிட சிலாக்கியமாகச் செய்யப்பட்டவையாதலால் தூரப் பிரதேசங்களுக்கு எதிரியின் விமானங்களைவிட அதிக கனமான குண்டுகளை ஏற்றிச் செல்லமுடியும். இதைவிட புதிய, பெரிய வெடிகுண்டு விமானங்கள் பிரிடனில் கட்டப்படுகின்றன. அவைகள் உபயோகப்படும்பொழுது இப்போது இருப்பதையும்விட மேலான நிலை ஏற்படும்.

இப்புதிய விமானங்கள் அதிக பெரிய வெடிகுண்டுகளை அதிகச் செலவன்னியில் ஏற்றிச் செல்லமுடியும். அப்படிப்பட்ட ஒரு விமானத்தைக்கட்ட 75,000 மனுஷ-மணிகள் பிடிக்கிறது. அதே மாதிரி விமானம் தூக்கிச்செல்லும் வெடிகுண்டுகளை உற்பத்தி செய்வதற்கும் அந்நேரம் பிடிக்கும். இவ்வளவு பெரிய விமானத்திலிருந்து மேகமரைவிலோ அல்லது இருட்டிலோ, நல்ல பக்கத்துணை போர்விமானங்களுடன், தேர்ச்சியுள்ள ஸ்வல்ப மாலுமிகள் குண்டுகளை வீசமுடியுமாதலால், இதைமிகவும் சிக்கனமாகவும் வெற்றிகரமாகவும் உபயோகப்படுத்திக் கொள்ளமுடியும் என்று லெப்டினன்டு கர்னல், மூர் பிராப்ஸன் காமன்ஸ் சபையில் சொன்னர்.

மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் வார்த்தைகளிலிருந்து குறிப்பிட்டு இன்னதுதான் முடியும் என்று சொல்லப்படாவிட்டாலும், இப்போது ஒருதடவை எதிர்த்துச்செல்லும் காலத்தில் ஜெர்மனியில் உள்ள லக்ஷிய இடங்களுக்கு நூற்றுக்கணக்கான டன்களை பிரிடிஷ் விமானப்படை கொண்டுபோவது முடியும் என்று வைத்துக்கொள்ளலாம்.

விமானப்போரில் அநேக சங்கதிகளை கவனிக்கவேண்டும். குறிப்பிடும் லக்ஷியத்துக்குத் தக்கவாறு பீரங்கியில் சரியானபடி குண்டுகளை பொருக்கிப்போட்டு உபயோகிப்பதுதான் மிகவும் முக்கியமான விஷயம். யுத்தக் கப்பலைத் தாக்குவதென்றால் சாதாரண வெடிகுண்டு பிரயோகத்தால் போதாது. அதே மாதிரியாகவே ஒரு எதிரிப்படையைத் தாக்க, பலமான கவசம் பூண்ட கப்பல்களைத் தாக்கக்கூடிய அவ்வளவு பெரிய குண்டுகளைக்கொண்டு தாக்குவதும் சிக்கனமுறையல்ல. போர் விமானங்களை ஒருமிக்கச் சேர்த்துக்கொண்டுபோய் ஒரே சமயத்தில் சத்துருவைத் தாக்குவதா, அல்லது தனித்தனியே போர்புரிவதா என்பது கவனிக்கவேண்டிய விஷயம்.

ஒரே குறியில் எவ்வளவு பலமாகத் தாக்கினாலும், சில சமயங்களில் லக்ஷியம் பூராவாக நாசமாக்கினோம் என்று சொல்லுவதற்கு முடியாமல் போகிறது. அநேக குண்டுகளைப் பலமுறை பிரயோகம் செய்வதனால்தான் ஸ்திரமான நாசத்தைச் செய்யமுடிகிறது, இவ்விதம் இடைவிடாமல் எதிர்ப்பதென்றால் அநேக பெரிய போர்விமானப்படையும், அவைகளை ஓட்டத்தேர்ச்சியுள்ள அநேக விமான மாலுமிகளும் வேண்டும். ருஷ்யாவை ஜெர்மனி எதிர்ப்பதற்கு கொஞ்சகாலம் முன்வரை ஜெர்மனியை பிரிடிஷ் விமானப்படைகள் இம்மாதிரி அதிக பலமாகத் தாக்கி எதிர்ப்பும் வரவர பலப்பட்டது.

குண்டுகள் வீசமுடியாதபடி பருவநிலை எந்த சமயத்திலும் செய்துவிடக் கூடும். அச்சமயங்களைத் தவிர இனி ஜெர்மன் சைனியம் முறிந்துபோகும்வரை பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியை இடைவிடாது தாக்கிக்கொண்டுதானிருக்கும். அதைத் தடுக்கவேண்டுமானால், ஜெர்மன் விமானங்கள் எதிர் யுத்தத்திற்கு வெடிகுண்டுப் படைகளை சேகரித்துத் தயாராக இருக்கவேண்டும்.

மேலே சொல்லியிருப்பதைத்தான் மிஸ்ட்டர் சர்ச்சில் எதிர்பார்த்து சொல்லியிருக்கிறார். அவ்விதம் ஆகாய விமானத் தாக்குதலிலிருந்து காத்துக்கொள்ள முடியாவிட்டாலும், யுத்ததந்திர உபாயங்கள் எதிரிக்குச் சாதகமாய் இருந்தாலும் தாக்குவதற்குள்ள சக்தி நமக்கு அதிகரிக்குமாகையால், அவர்களுடைய எதிர்ப்பு பலமாய் இராது. ஆனால் நம்முடைய பாதுகாப்புக்கு வைத்திருக்கும் இரவு போர் விமானங்களை முன்னைவிட அதிக பலப்படுத்தியிருக்கிறோம். அதனால் ஜெர்மானிய விமானப்படையை வீழ்த்த அதிக எளிதாகும். ஆகையால் அவர்கள் நம்மைத் தாக்குவதைவிட நாம் அவர்களைத் தாக்க வலிவு ஏற்படும்.

இன்னும் அதிக பெரிய விமானங்களைக்கொண்டு நிச்சயமாய் வலுவாக எதிர்க்கப்போகிறோம். இரவில் அடிப்பதோடுகூட பகலிலும் தாக்கப்போகிறோம். ஒவ்வொரு நாளும் தவராது பகைவர் தலையில் உயர்ந்த வெடிமருந்துகள் கனம் கனமாக வந்துவிழும். அதோடு நமது நகரங்களுக்கு முன்னைவிட அதிக பலமான பாதுகாப்பு அளிப்போம். அச்சமயம் நமது நகரங்கள் முன்னைவிட அதிகமாகத் தாக்கப்படலாம். ஆனாலும், கீழே வீழ்த்தப்படும் ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களின் வீத சாம்யம் அதிகரித்து வருகிறதென்பதையும், நாம் வாங்கிக்கொள்ளுகிற

அடியைவிட திருப்பிக்கொடுப்பது வலுவானதென்பதையும் அவர்கள்அறிவார்கள். ஆகையால், அடியைப் பொறுத்துக்கொள்ள முன்பைவிடத் தயாராகவே இருப்பார்கள்.

ஆகவே, வெடிகுண்டுகளை போடுவதினுல்மட்டில் வெற்றியடையலாமா? என்பது கேள்வி. இதுவரை ஜெர்மனி தாங்கள் பிறரை அடிப்பதைவிட, பிறர் தாங்களை அடிக்கமாட்டார்கள் என்று நினைத்திருந்தார்கள். ஆனுல் இனி நம்முடைய விமான எதிர்ப்பு வெகு கடுமையாக நடக்கும்பொழுது, ஜெர்மானியர் தாங்கள் பிறரை வதைத்த பிரகாரம் தாங்களும் வதைக்கப்படுவதை உணர்வார்கள். அதிலிருந்து அவர்கள் சரணுகதிக்கு வந்து விடுவார்கள்.

இன்னும் நாம் எவ்வளவோ விமானங்களைக் கட்டப்போகிருேம். ஜெர்மானியர்களும் முன்னைவிட பெரியவைகளாக வெடிகுண்டுப் படைகளை ஏற்படுத்துவதில் பிரயாசைப்பட்டு முடியாமல் தவிக்கிருர்கள்.

பிரிடனும், அமெரிக்காவும் தங்களுடைய சாதனங்களை ஒன்றுசேர்த்து ஜெர்மனியைக் காட்டிலும் பெரிய விமானப்படையைத் தயாரித்துக்கொண்டு ஜெர்மனியுடன் செய்யும் ஆகாயப்போரில் நாம் ஜயமடைவோம் என்பது நிச்சயம்.

---

## கதம்பம்.

---

1. "நமக்கு ஜயம் வரக்கூடிய வழியைக் கண்டுபிடித்துவிட்டோம் இவ்வளவு நாட்களில் ஜயம் பெறப்போகிருேமென்பது சொல்ல முடியாத போனுலும் கூடிய சீக்கிரத்தில் 1918-ம் வருஷத்தில்போல், ஜெர்மானியர் தங்களுக்கேற்பட்ட நஷ்டங்களையும், முடியாத தன்மையும், அடைந்த வெட்கத்தையும் அறிந்து, தாங்களாகவே திடீரென்று முறிந்து அழிவார்கள்."

(டச்சு வெளிநாட்டு மந்திரீ எம்-கட், ஆகஸ்டு, 4).

2. "தற்போதய யுத்தத்தில் மிகவும் திருப்திகரமான சம்பவங்கள் இருக்கின்றன. இவைகளைப் பார்த்தால் தீவிர தத்வஞானிக்கும் உத்ஸாகம் ஏற்படாமல் இருக்காது."

(மிஸ்டர் ஸி. ஆர். அல்லி, ரகஸிய மந்திரி, ஆகஸ்டு 6).

3. "இந்த யுத்தத்தில், தன் தேசத் தற்காப்பிலும், பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தைக் காப்பதிலும் முன் யுத்தத்தைவிட இந்தியா அதிகம் புகழ் அடையும் என்று நிச்சயமாய்க் கூறுகிறேன்."

(ஹிஸ் ஹைனஸ், பாட்டியாலா மஹாராஜா, சிங்கப்பூர், ஆகஸ்டு 7).

4. "ஆஸ்திரேலியாவைப் பாதுகாக்க, அதற்கு வெகு தூரத்திலேயே முடிந்தவரை தற்காப்புச் செய்துகொள்ளவேண்டும்."

(மிஸ்டர் ஆர். ஜி. காஸினி, ஆஸ்திரேலியா மந்திரி, ஆகஸ்டு 7).

5. "ஜப்பானுக்கு யுத்திவரவேண்டுமானுல் நாம் அதற்கு தாக்ஷண்யம் காட்டக்கூடாது."

(டெய்லி டெலகிராப், ஆகஸ்டு 8).

6. "இதுவரை அடைந்ததாகச் சொல்லும் வெற்றிகள் பேருக்கே ஒழிய ஜெர்மனிக்கு நிச்சயமான ஜயத்தைத் தரவில்லை. ஒவ்வொன்றும் மேல்மேலும் சண்டையையே விளைவிக்கிறது. இவ்விதமாகச் செய்து, தனக்கும், தன் ராஜ்ஜியத்திற்கும், தன் ஜனங்களுக்கும் நாசத்தைத்தான் ஹிட்லர் விளைவிக்கிருர்."

(எம். பால் ஸ்பாக், லண்டனில் டச்சு வெளிநாட்டு மந்திரி, ஆகஸ்டு 9).

7. "ஆகையால் நமக்குள்ளிருக்கும் மத சம்பந்தமானதும், ராஜீய மானதும், ஜுசார சம்பந்தமான தகராறுகளைத் தள்ளிவிட்டு யுத்த முயற்சிக்குப் பாடுபடுவோம்; இவ்விதம் ஒன்று சேருவதே நம்முடைய வித்தியாசங்களைத் தாணுகவே சீக்கிரமாகத் தீர்க்க ஹேதுவாகும்."

(மாக்ஷிமையுள்ள-ஸர்-மாரிஸ்-ஹாலெட், ஐக்கிய மாகாண கவர்னர், ஆகஸ்டு 9).

8. "டோவருக்கு 21 மைல் சமீபத்தில் இந்த ஹூண ஹிட்லர் இருந்தாலும், அவனுடைய அசுரச்செய்கைகள் டோவரிலுள்ள முன்னேற்றத்திற்கு 2,000 வருஷம் பழைமையானதாக இருக்கின்றன."

(மிஸ்டர் ஹாப்கின்ஸ் லண்டனிலிருந்து ஒலிபரப்பியது, ஜூலை 27).

9. "இந்தியா பிரிடனுக்கு உதவுவதைக் காட்டிலும் பிரிடனின் உதவி இந்தியாவுக்கு அதிகம் தேவை என்று நம்புகிறேன்."

(ஸர். மிர்ஸா-இஸ்மேல், பூனு, ஜூலை 27).

10. "மற்ற சண்டைகளைக் காட்டிலும், ருஷ்யாவில் நடக்கும் யுத்தம் அதிக திகிலைச்செய்கிறது."

('பண்டு' என்ற ஜூரிச் பத்திரிகையில் வெளியான ஜெர்மன் சிப்பாய் எழுதிய கடிதம், ஜூலை 29).

## ஜெர்மானியர் தங்கள் அபிப்பிரயங்களை மாற்றிக் கொள்ளும் விதம்.

## கோயபெல்ஸ் கால அட்டவணை.

## ருஷ்யப் படையின் புனருத்தாரணம்.

இது உண்மையா ?

1. **ஜூன் 30.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.**

*இரண்டு நாட்களுக்குமுன்பு தான் ருஷ்யர் பின்வாங்கியதைப் பற்றிப் பேசினோம். இப்பொழுது அவர்கள் தலை விரி கோலமாய் ஓடுகிறார்கள்.*

2. **ஜூன் 30.—பெர்லின் சொன்னதை ரோம் ஒலிபரப்பியது.**

*ருஷ்ய விமானப்படைக்கு சண்டை புரிய சக்தியே இல்லை. ஆகையால் இனிவரும் ஜெர்மன் முஸ்தீபுகளுக்கு ருஷ்ய விமானங்கள் நிச்சயமாகக் இடைஞ்சல் செய்யமுடியாது.*

3. **ஜூலை 17.—ஜெர்மன் அதிகார அறிக்கை.**

*கடைசியான மூல பலங்களைக் கொண்டு ருஷ்யர்கள் நாம் முன்னேறுவதைத் தடுக்கப் பார்க்கிறார்கள்.*

அல்லது இதுவா ?

**ஜூலை 26.—பிரான்க் புர்டர், ஜீடங்.**

*தற்காப்புச் செய்துகொண்டு இருந்தால் போதுமென்று சொப்பனத்திலும் ருஷ்ய அதிகாரிகள் நினைக்கவில்லை. ஆனால் ஆரம்பமுதல் ஜெர்மன் எதிர்ப்புகளைப் பலவந்தமாகத் திருப்பித் தாக்குகிறார்கள்.*

**ஜூலை 21.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.**

*போர்முனை ஜெர்மனியிலிருந்து தூரம் அதிகரித்துக்கொண்டு போவதால், பின்புறமுள்ள போக்குவரத்து சாதனங்கள் எதிரிகளின் தாக்குதல்களுக்கு எளிதாயிருக்கிறது. அவைகளை எதிரி விமானங்கள் குறிபார்த்து அடிக்கின்றன.*

**ஜூலை 24.—நேஷனல் ஜீடங், எஸ்ஸன்.**

*ருஷ்யர்களுக்கு மேலும் மேலும் கூசனியம் சேர்க்க ஏராளமாக மனித உதவியிருக்கிறது. கும்பல் கும்பலாக ஸோவியத் சிப்பாயிகள் ஜெர்மானிய வரிசைகளைத் தடுக்க எப்பொழுதும் ஒன்று சேர்க்கமுடியும்.*

**ஜூலை 26.—ஜெர்மன் உள்நாட்டு ஒலிபரப்பு.**

*அடிக்கடி புதிதாக படையைத் திரட்ட முடியுமென்று ருஷ்யர்கள் காண்பித்திருக்கிறார்கள்.*

| இது உண்மையா? | அல்லது இதுவா? |
|---|---|
| **4. ஜுலை 17.—பிரான்க் புர்டர், ஜீடங்.** | **ஜுலை 27.—ஜெர்மன் உள்நாட்டு ஒலி பரப்பு.** |
| யந்திர சாதனமென்பதை ஐரோப்பிய நாடுகளில் தான் காணமுடியும். ருஷ்ய டாங்கிகள், யந்திர சக்தியில் மேலானவையல்ல. | இதுவரை நாம் எதிர்த்த எதிரிகளுக்குள் ருஷ்யர்களின் ஸூஸ்தீபு மிகவும் நவீனமானது என்று கிழக்கு தேசங்களில் சண்டை செய்யும் யாவருக்கும் தெரியும். |
| **5. ஜுலை 15.—ஜெர்மன் உள்நாட்டு ஒலி பரப்பு.** | **ஜுலை 24.—புதாபெஸ்டில் 'பெஸ்டி' என்ற பத்திரிகையின் ஜெர்மன் நிருபர்.** |
| இங்கிலீஷகாரர்களும், ருஷ்யர்களும் செய்துகொண்ட உடன்படிக்கை ஒரு பெரிய காரியமா? ருஷ்யாவிலுள்ளோர் லண்டனில் இருந்து எவ்வாறான உதவியை எதிர்பார்க்கமுடியும்! | இப்பொழுது பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்டிருக்கும் நேரான ராணுவ கூட்டுறவைப்பற்றி பெர்லின் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. பெர்லினில் இவ்விஷயம் தீவிரமாகக் கருதப்பட்டும், அவ்வொப்பந்தம் அதிக முக்யத்வம் வாய்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. |

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 57.

| 1941— | | | | மணி. |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு | ...16, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 17, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | திருவரங்குளம் ... | மாலை | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| | 18, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | மேலூர் ... | மாலை | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |
| | 19, செவ்வாய்க்கிழமை | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| | 20, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம்... | காலை | 10.00 |
| | | சேரி பள்ளிக்கூடம் ... | மாலை | 5.30 |
| | | ஒடுக்கூர் ... | ,, | 6.00 |
| | | மருதம்பட்டி ... (நாங்குப்பட்டி). | ,, | 6.30 |
| | 21, வியாழக்கிழமை. | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| | 22, வெள்ளிக்கிழமை... | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 58.

| | | | | |
|---|---|---|---|---|
| | 23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 24, ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் ... | காலை | 10.15 |
| | | பூவரசகுடி ... | மாலை | 6.00 |
| | | வேங்கடக்குளம் .. | ,, | 6.30 |
| | 25, திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை... | ,, | 10.15 |
| | | பெருங்களூர் ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 26, செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி ... | ,, | 6.00 |
| | | பெரம்பூர் ... | ,, | 6.30 |
| | 27, புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் ... | காலை | 10.00 |
| | | திருக்கோகர்ணம் ... | மாலை | 5.30 |
| | | அரிமளம் ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை ... | ,, | 6.30 |
| | 28, வியாழக்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 29, வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—16-8-41.